வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu








Email : news@eelanadu.lk மலர் : 03 06.01.2022 வியாழக்கிழமை இதழ் : 32 பக்கங்கள் : 16


# ஆரியகுளத்தில் மத உரிமையை மீறும் அதிகாரம் மாநகர சபைக்கு கிடையாது!

### ஆணையாளருக்கு ஆளுநர் காட்டமான கடிதம்!

யாழ்ப்பாணம், ஜனவரி 06

“யாழ்ப்பாணம் - ஆரியகுளத்தில் பொதுமக்களின் மத உரிமையை மீறும் வகையில் செயல்படும் அதிகாரம் மாநகர சபைக்குக் கிடையாது” என்று யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

15

## மஹிந்தவை ஓரங்கட்டவே பதவி நீக்கப்பட்டார் சுசில்!

### சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 06

“பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசியாகச் சுசில் பிரேமஜயந்த இருக்கின்றார். அரசிலிருந்து மஹிந்தவை ஓரங்கட்டவே அவரின் சகாவான சுசில் பிரேமஜயந்தவின் கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பறிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஐக்

15

## உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி

### விவசாயத்துறை அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 06

“நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில், அவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும்.”

- என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் உணவுத் தட்டுப்பாடு

15



## 400 கிலோ வெடிகுண்டுகளை இரும்புக்கு கடத்தியோர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 06

தலா 400 கிலோ எடை கொண்ட இரு வெடிகுண்டுகளை கடத்திய 6 பேரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் 12 வருடங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து

15

### பகிடிவதை குற்றச்சாட்டு;

## யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் விஞ்ஞானபீட மாணவன் நுழைய தடை!

யாழ்ப்பாணம், ஜன. 06

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் ஒருவர், புதுமுக மாணவர்கள்மீது பகிடி வதையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் மறு அறிவித்தல் வரை - விசாரணைகள் முடியும் வரை பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதிக்கும் உள்

15

## அரசில் இருந்து சு.கவை உடன் வெளியேற்றுங்கள்

### கோருகின்றார் திலும் அமுனுகம

கொழும்பு, ஜன. 06

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அரசிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அரசுக்குள்ளும், அமைச்சரவையிலும் ஒழுக்கம் இருக்க வேண்டும்.

15

## ஒற்றையாட்சியை தமிழர்களை ஏற்கவைப்பதற்கான சதியே ‘13’

### கஜேந்திரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், ஜன. 06

“இலங்கையை மகிழ்விப்பதற்கும், தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கும் தமிழ் தலைவர்களை வைத்து இந்தியா எடுக்கும் முயற்

15

## வல்வெட்டித்துறை பட்ட திருவிழா இந்த ஆண்டும் நடைபெறாது!

வடமராட்சி, ஜன. 06

வல்வெட்டித்துறையில் வருடாந்தம் தைப்பொங்கல் தினத்தில் நடத்தப்படும் பட்டத் திருவிழா இந்த ஆண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை உதயசூரியன் திடலில் வருடாந்தம் பட்டத் திருவிழா நடைபெறுவது வழமை. இந்த நிலையில், அந்தப் பகுதி மக்களுக்கும்

15

## இந்தியாவில் தடுப்பிலிருந்த யாழ். மீனவர்கள் விடுதலை!

சென்னை, ஜன. 06

எல்லை தாண்டிச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வல்வெட்டித்துறையை சேர்ந்த மீனவர்கள் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்திய எல்லைக்குள் அத்து

15

## வடக்கில் பூஸ்டர் பெறுவதில் பொதுமக்கள் ஆர்வமில்லை!

யாழ்ப்பாணம், ஜன. 06

இரண்டாவது தடுப்பூசியை பெற்று மூன்று மாதத்தின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், பூஸ்டர் தடுப்பூசியை

15

## தனியார் மயமாகின்றது இலங்கை ரயில் சேவை?

கொழும்பு, ஜன. 06

நாட்டில் உள்ள ரயில் சேவையை தனியார் மயமாக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ள

15

## நான் ஏதும் சொன்னால் அது பிரச்னையாகுமா?

### தினேஷிடம் கிசுகிசுத்த விமல்!

கொழும்பு, ஜன. 06

நான் ஏதாவது சொன்னால் அதனால் பிரச்னை ஏற்படுமா? என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் காதில் விமல் வீரவன்ஸ கிசுகிசுத்த விடயம் ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

நேற்றைய தினம் கொழும்பு - மாலபே தொழில்நுட்ப கல்லூரிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அமைச் சர்கள் தினேஷ் குணவர்த்தனவும் விமல் வீரவன்ஸவும் பங்கேற்றிருந்தனர்.

15

## 1907 எண் மூலம் முறையிடலாம்!

கொழும்பு, ஜன. 06

1907 என்ற துரித இலக்கத்தை தொடர்பு கொண்டு சுகாதாரத் துறை சம்பந்தமான முறைப்பாடுகளை தெரிவிக்கவும் ஆலோசனைகள் மற்றும் குறைகளை தெரிவிக்கவும் முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15

### இந்திய பிரதமருக்கான கடிதம்:

## இறுதி முடிவு எட்டக்கூடுகிறது தமிழ் முற்போக்கு கூட்டணி!

கொழும்பு, ஜன. 06

இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படவுள்ள பொது ஆவணம் தொடர்பில் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் அரசியல் குழு கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைக்குழு நேற்று தீர்மானித்தது.

இது தொடர்பில் கூட்டணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

13ஆவது திருத்தம் என அறியப்

15

## இப்படியும் நடக்கிறது…!

அமெரிக்கர் ஒருவரும் ரஷ்யர் ஒருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

அமெரிக்கர் சொன்னார்:

"அமெரிக்கர்களாகிய எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. இப்பொழுதே நான் வெள்ளை மாளிகைக்குச் செல்ல முடியும். அமெரிக்க ஜனாதிபதியைப் பார்த்து நீ ஒரு முட்டாள் என்று நேருக்கு நேர் சொல்ல முடியும் அதற்காக என் தலையை யாரும் வாங்கி விட மாட்டார்கள். ரஷ்யர்களாகிய உங்களால் அப்படிச் செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த ரஷ்யர் சென்னார்,

"ஏன் முடியாது, இப்பொழுதே நானும் கிரெம்ளின் மாளிகைக்குச் செல்ல முடியும். அமெரிக்க ஜனாதிபதி ஒரு முட்டாள் என்று சொல்ல முடியும்"!.

அரசாங்கத்தில் முக்கிய அமைச்சர்கள் மூவர் அடிக்கடி அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றனர்.

விமல், கம்பன்பில, வாசுதேவ ஆகிய அந்த மூன்று அமைச்சர்களும் இன்றைய அரசாங்கத்தில் முக்கியமான மூன்று அமைச்சர்கள். அண்மைக்காலமாக அரசின் பல விடயங்களை நேரடியாக விமர்சித்து வருகின்றனர்.

மின்உற்பத்தி நிலையம் ஒன்றை அமெரிக்க நிறுவனத்திற்கு விற்ற விவகாரத்தில் தமது கண்டனத்தை தெரிவித்து வருவதுடன் நின்றுவிடாமல், நீதிமன்றத்திற்கும் அந்த விவகாரத்தை எடுத்துச் சென்றிருக்கின்றனர்.

இந்த மூவரிலும் முக்கியமாக விமல் வீரவன்ச தற்போதைய ஜனாதிபதியின் தீவிர ஆதரவாளர் என்று கூறப்படுபவர்.

ஜனாதிபதி கோட்டாபய, அரசியலில் ஈடுபடுவதற்கு முன்னர் அதற்கான ஆயத்த நடவடிக்கைகளை தொடங்கியபோது, 'வியத்மக' என்ற அமைப்பு ஒன்றையே முதலில் ஆரம்பித்து களத்தில் குதித்திருந்தார். இன்று அரசில் முக்கிய பதவிகளில் இருப்பவர்களில் பலர் அந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள்தான்.

அந்த அமைப்பில் முக்கிய பதவியில் இருந்த தமிழ் நண்பர் ஒருவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது, ஒரு விடயத்தை ஞாபகப்படுத்தினார்.

விமல் வீரவன்ச, தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு வந்து சேரும் வரை ஜனாதிபதி அவருக்காக காத்திருப்பாராம். கூட்டங்களில் கூடும் மக்களை "கட்டிப்போடக் கூடிய" சிறந்த பேச்சாளரான விமல், கூட்டத்திற்கு வருவதையும் ஜனாதிபதி எப்போதும் உறுதிசெய்து விடுவாராம். அத்தகைய முக்கியத்துவம் வழங்கப்பட்ட விமல் இன்று, அரசாங்கத்தை அடிக்கடி விமர்சித்து கருத்துச் சொல்லி வருகின்றார்.

அமைச்சரவையில் முடிவு எடுக்கப்படுகின்றபோது அமைதியாக இருந்துவிட்டு, வெளியே வந்து விமர்சிக்கிறார் என்றும் அவர் மீது புகார் கூறப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில்தான், அவர்களைப் பார்த்து தாமும் விமர்சித்தால் என்ன என்று நினைத்தாரோ என்னவோ, சுசில் பிரேமஜயந்தவும் பகிரங்கமாக அரசை விமர்சிக்கப்போய், இப்போது பதவியைப் பறிகொடுத்திருக்கிறார்.

மகிந்தர் ஜனாதிபதியாக இருந்தபோது, முக்கிய அமைச்சர்களில் ஒருவராக இருந்தவர். அப்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராகவும் இருந்தவர்.

கோட்டாபயவின் முதலாவது அமைச்சரவையில் அவருக்கு பதவியெதுவும் கொடுக்கப்படவில்லை. இராஜாங்க அமைச்சர்கள் முதலில் நியமிக்கப்பட்ட போதும் அவர் இடம்பெற்றிருக்கவில்லை. பின்னர் அவரது நெருக்குவாரத்தாலேயே இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பதவியை வேண்டா வெறுப்பாகவே வகித்துவந்த அவர், தானாக பதவிவிலகாமல் வெளியேற்றப்படவேண்டும் என்பதற்காகவே அரசை விமர்சித்திருக்கலாம் என்றே அவருக்கு நெருக்கமான ஒருவர் இந்த ஊர்க்குருவியிடம் தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளினில் போய், ரஷ்ய ஜனாதிபதி ஒரு முட்டாள் என்று சொல்லிப்பார்த்தால் எப்படியிருக்கும்? என்பது அவருக்கு இப்போது புரிந்திருக்குமோ?

- ஊர்க்குருவி

# கொரோனா கட்டுப்பாட்டில் உள்ளபோதும் சுகாதார நடவடிக்கைகள் தொடரவேண்டும்

## அனில் ஜாசிங்க கோரிக்கை

கொழும்பு, ஜன. 06

கொரோனா வைரஸ் தற்போது நாட்டில் கட்டுப்பாட்டில் உள்ளபோதும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் தொடரவேண்டும் என சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சில் கொரோனா பரவலைத் தடுப்பதற்கு பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா தடுப்புக்காக சுகாதார அதிகாரி ஒருவரின் சேவையைப் பெறுமாறு ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

நியூயோர்க் நகரில் நோயாளிகள் இன்னும் பதிவாகி வருகின்றனர் என தெரிவித்த அவர், இங்கிலாந்தில் தினமும் சுமார் ஒரு இலட்சம் நோயாளிகள் பதிவாகுவதாக குறிப்பிட்டார்.

இலங்கையும் கடந்த காலங்களில் கொரோனா வைரஸ் காரணமாக நிறைய சிரமங்களை எதிர்கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேசமயம், ஒமைக்ரோன் வைரஸ் இந்த நாட்களில் உலகம் முழுவதும் பரவி வருகிறது.

எவ்வாறிருப்பினும் இலங்கையில் கொரோனா தொற்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நோயாளிகள் பதிவாகியிருந்தாலும் இறப்பு வீதம் குறைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

எனவே, தனிப்பட்ட இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும் என்பதோடு, முகக்கவசங்களை அணிவது மற்றும் கைகளை சுத்தம் செய்வது ஆகியவை கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த ஒரு தந்திரமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அனில் ஜாசிங்க தெரிவித்தார். (அ)

## நடுக்கடலில் பழுதடைந்தது சமுத்திரதேவி பயணிகளை பாதுகாப்பாக மீட்ட வடதாரகை

யாழ்ப்பாணம், ஜன. 06



நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான கடற் போக்குவரத்து சேவை இடம்பெற்றபோது பாரிய அசம்பாவிதம் மயிரிழையில் தவிர்க்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை காலை 100இற்கு மேற்பட்ட பயணிகளுடன் புறப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திரதேவி படகு இடைநடுவில் பழுதடைந்த நிலையில் பின்னர் வடதாரகைப் படகின் உதவியுடன் குறிகட்டுவான் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

நெடுந்தீவில் இருந்து நேற்றுக் காலை குறிகட்டுவான் நோக்கிப் பயணித்த பயணிகள் படகின் சுக்கான் நடுக் கடலில் உடைந்து தத்தளித்தது.

உடனடியாக வடதாரகை அங்கு வரவழைக்கப்பட்டது.

ஆயினும் பயணிகளை வடதாரகை படகுக்கு மாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. பல இடையூறுகள் மத்தியில் வடதாரகை சமுத்திரதேவியை இழுத்து சென்றது.

காலை 07.00 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்பட்ட மக்கள் முற்பகல் 10.00 மணியளவில் குறிகட்டுவான் இறங்கு துறைக்கு பாதுகாப்பாகச் சென்றடைந்தனர். (அ)

## ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் மரணம்

கொழும்பு, ஜன. 06

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் 23ஆம் திகதி சுகயீனம் காரண மாக சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதன்பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக குறித்த சந்தேகநபர் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

## நல்லூர் ஆலய பரிபாலகர் பற்றிய கைநூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 06




வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் எழுதிய "எளிமை மிகு பரிபாலக ஆளுமை" என்ற கைநூல் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீன மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பரிபாலகர் அமரர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நற்செயல் பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ள இந்த நூலின் வெளியீட்டுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமை தாங்கவுள்ளார்.

நிகழ்வில் நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் கருத்துரைகளை ஆற்றுவர்.

நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் கைநூல் இலவசமாக வழங்கப்படும். சுகாதார விதிகளை பின்பற்றி அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# சாதாரண நடைமுறைகளுக்கு அமைவாக ஜன. 10 முதல் பாடசாலைகள் செயல்படும்

கொழும்பு, ஜன. 06

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய, முதலாம் தரம் முதல் 13ஆம் தரம் வரையில் கல்வி நடவடிக்கைகளை சாதாரண நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கொரோனா பரவல் அதிகரித்து வந்த நிலையில், பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன.

இதனையடுத்து, சில கட்டுப்பாடுகளுடன் பாடசாலைகள் மீள திறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Eelanadu
06.01.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 730 1370

## ஜே. வி. பியின் தலைமை?

அண்மையில் ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தற்போதைய நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்கு ஜே. வி. பி. தலைமை ஏற்கத் தயாரென்று குறிப்பிட்டிருந்தார். இலங்கையின் இரண்டு பிரதான பாரம்பரிய கட்சிகளும் நாட்டை சீரழித்துவிட்டன. எனவே, புதியதொரு தலைமைத்துவம் நாட்டிற்கு தேவையென்பதே அவரின் வாதமாக இருக்கின்றது. ஆங்கில ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் - வடக்கு, கிழக்கிலுள்ள அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதற்கான தங்களின் கதவு திறந்திருப்பதாகவும் திஸநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

தர்க்க ரீதியாக நோக்கினால் அநுரகுமார கூறுவது போன்று, இலங்கையின் இரண்டு பாரம்பரிய கட்சிகளாலும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியவில்லை என்பது உண்மைதான். இதற்கான அடிப்படையான காரணம் என்ன? இலங்கையின் தேசிய இனப்பிரச்னைதான், இந்த நாட்டின் அனைத்து சீரழிவுகளுக்கும் காரணம். இலங்கையை மாறி, மாறி ஆட்சிசெய்த இரண்டு பிரதான சிங்கள கட்சிகளும் - பிரச்னைக்கான நியாயமான தீர்வை காண்பதற்கு பதிலாக, தமிழ் மக்களை பலவீனமாக்குவதன் ஊடாக, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை இல்லாமலாக்கும் அழிவுப் பாதையையே தெரிவு செய்தன. இந்த அழிவுகரமான பாதையில் பயணித்ததன் விளைவுகளைத்தான் இந்த நாடு இன்று எதிர்நோக்கியிருக்கின்றது.

இன்றைய நிலைக்கு, இரண்டு பிரதான கட்சிகள் மட்டும்தானா காரணம்? ஜே. வி. பி. போன்ற தென்னிலங்கை கட்சிகளுக்கு எந்தவொரு பொறுப்பும் இல்லையா? ஜே. வி. பி. ஆட்சி செய்யாமல் இருந்திருக்கலாம் ஆனால், கொழும்பின் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்பட்டிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் தமிழர் விரோத யுத்தத்திற்கு முண்டு கொடுத்ததில் ஜே. வி. பிக்கு பிரதான பங்கு உண்டு. தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் இருப்பை எதிர்ப்பதில் - சிதைப்பதில், சிங்கள இனவாத சக்திகளுக்கும் ஜே.பி.விக்கும் இடையில் என்ன வேறுபாடுண்டு? 2006இல் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராக, வழக்கு ஒன்றை தாக்கல் செய்து, தென்னிலங்கை சிங்கள - பௌத்த இனவாதிகளின் நெடுநாள் விருப்பத்தை ஜே. வி. பி. பூர்த்திசெய்தது. 1988இலிருந்து, சுமார் 18 வருடங்களாக நிர்வாக ரீதியில் இணைந்திருந்த வட, கிழக்கு மாகாணம், ஒரு நீதிமன்ற தீர்ப்பின் மூலம், பிரிக்கப்பட்டது. மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர், இந்த விடயத்தை செய்து முடிக்க வேண்டுமென்னும் ராஜபக்ஷவின் விருப்பத்தை, ஜே. வி. பி. செய்து முடித்தது.

1988இற்கு பின்னர் தென்னிலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் எவையுமே இவ்வாறானதொரு முயற்சியை மேற்கொள்ளவில்லை. மகாண சபை முறைமையை தொடர்ந்தும் எதிர்த்து வருகின்ற நவீன சிங்கள இனவாதத்தின் பிதாமகரென்று போற்றப்படும், குணதாச அமரசேகரகூட, இப்படியானதொரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கவில்லை. ஆனால், ஜே. வி. பி. செய்தது. தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை சிதைக்க வேண்டுமென்பதில் தென்னிலங்கையின் எந்தவொரு சிங்கள இனவாத கட்சிகளை விடவும், ஜே. வி. பி. தீவிரமான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது.

தமிழ் நோக்கில் தென்னிலங்கையின் பிரதான கட்சிகளுக்கும் ஜே. வி. பிக்கும் இடையில் எந்தவொரு வேறுபாடும் இல்லை. தமிழ் மக்களை பொறுத்தவரையில் அனைத்து சிங்கள கட்சிகளுமே - ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். ஜே .வி. பி., மாறுபட்ட அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த முயற்சிப்பது உண்மையாயின், இந்த நாட்டின் அடிப்படையான பிரச்னையான, தேசிய இனப்பிரச்னை பற்றி நேர்மையுடன் பேச வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான பிரச்னைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிகாரத்திற்காக சிங்கள இனவாதத்தைக் கையிலெடுக்கும் பிரதான கட்சிகள் போலல்லாது, நேர்மையுடனும் உண்மையுடனும் சிங்கள மக்களை எதிர்கொள்ள வேண்டும். ஜே. வி. பியால் இது முடியுமா?



# அரசு ஆட்டம் காண ஆரம்பித்ததை வெளிப்படுத்தும் முதல் அறிகுறி!

**அலசுவது இராஜதந்திரி**

ஆட்சியாளர்கள் மிக நெருக்கடி நிலைக்குள்ளாகியுள்ளனர். அத்துடன் மேலும் பல நெருக்கடிகளை எதிர்நோக்கப் போகின்றார்கள் என்பதற்கு கட்டியம் கூறுவதுபோல இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அவரின் அமைச்சுப் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளார்.

அமைச்சரவையிலுள்ள மேலும் பலருக்கு சுசில் பிரேம ஜயந்தவுக்கு நேர்ந்த கதியே நேரிடலாமென அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

சுசில் பிரேம ஜயந்த இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டமைக்கு அவர் பொதுச் சந்தையொன்றில் மக்களோடு அளவளாவி தற்போதைய பொருளாதார நிலவரம் குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டதே முக்கிய காரணமெனக் கூறப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தையொன்றில் பொதுமக்கள் அவரைச் சந்தித்தபோது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலவரம் பற்றி விமர்சித்துள்ளனர். அப்போது, விலையேற்றங்கள் குறித்து சுசில் பிரேம ஜயந்தவிடம் கூறியபோது அவர் மக்கள் கூறிய எதனையும் மறுக்கவில்லை. அத்துடன், விவசாயத்துறை அமைச்சு தோல்வி, விவசாயத்துறை சார்ந்த அரசின் கொள்கை தோல்வி என்பதை சுசில் பிரேம ஜயந்த கூறியுள்ளார்.

இந்த விடயம் ஜனாதிபதியின் செவிகளுக்கு எட்டியதையடுத்தே சுசில் பிரேம ஜயந்த இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சுசில் பிரேம ஜயந்தவின் பதவி நீக்கம் ‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பதற்கமைவாக அரசுக்குள் நிலவுகின்ற குழப்பகரமான நிலையையும் மேலும் பல அரச தரப்பு உறுப்பினர்கள் எதிர்வரும் நாட்களில் அரசிலிருந்து விலகினாலும் அல்லது விலக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதையுமே உணர்த்துகின்றது.

அரச தரப்பில் அரசை விமர்சிப்பவர்களை எடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேசமயம், செலவீனக் குறைப்பு என்ற விதத்தில் வெளிநாடுகள் சிலவற்றில் உள்ள இலங்கை தூதரகங்களும் மூடப்பட்டு வருகின்றன. ஏற்கனவே நைஜீரியாவிலுள்ள இலங்கைத் தூதரகம், ஜேர்மனியிலுள்ள இலங்கையின் துணைத்தூதரகம் ஆகியவை மூடப்பட்டுள்ளன. மேலும் பல தூதரகங்களும் மூடப்படலாமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய பின்னணியிலேயே தற்போது அரசாங்கம் ஆட்டங்காணும் அறிகுறிகள் சுசில் பிரேம ஜயந்தவின் பதவி நீக்கத்தோடு பலமாகத் தென்பட ஆரம்பித்துள்ளன.

ஜனநாயக நாடுகளில் ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டு சர்வாதிகாரிகள் ஆட்சிக்கு வருவதும் இராணுவ ஆட்சியாளர்கள் பதவிக்கு வருவதும் அடிக்கடி இடம்பெறுவதுண்டு. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை ஒரு சர்வாதிகாரியை அல்லது இராணுவ ஆட்சியாளரைத் தாமே ஆட்சியில் அமர்த்திய மனோநிலையில் மக்கள் இருப்பதையே தற்போது காணமுடிகின்றது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பதவி நீக்கம் செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பற்றி கருத்து வெளி யிட்டபோது பொது இடங்களில் ஓர் அரசாங்க உறுப்பினராக இருந்து கொண்டு அரசை விமர்சித்ததே சுசில் பிரேம ஜயந்த செய்த தவறு என்று கூறி ஜனாதிபதியான தமது சிறிய தகப்பனார் சுசில் பிரேம ஜயந்தவை பதவி நீக்கம் செய்தமையை நியாயப்படுத்தியுள்ளார்.

ஆனால், தான் ஒரு மக்கள் பிரதிநிதி எனவும் இதன்காரணமாக மக்கள் தன்னிடம் குறைகளைக்கூறும் போது தம்மால் எதனையும் பொய் கூறி மறைத்துவிட முடியாது என்று சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேம ஜயந்த எதனைக் கூறினாரோ அதனையே நியாயமாக சிந்திக்கத்தெரிந்த சகல அரச தரப்பினரும் கூறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இருந்தபோதிலும் தற்போது ‘மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது’ ஓர் இக்கட்டான நிலையில் அவர்களிருப்பதையும், நியாயமானவற்றை கதைக்க முற்பட்டால் தமக்கும் சுசில் பிரேம ஜயந்தவுக்கு ஏற்பட்ட கதியே ஏற்படலாமென்ற காரணத்தினால் அவர்கள் அனைத்தையும் அடக்கி வாசிப்பவர்களாக இருக்கின்றனர்.

புதிய ஆண்டு இன்றைய ஆட்சியாளருக்கு ஒரு நெருக்கடியான ஆண்டென்பதே அரசியல் அவதானிகளின் கணிப்பாக இருக்கின்றது. இந்நிலையில் சுசில் பிரேம ஜயந்தவின் பதவி நீக்கம் வெகு விரைவாகவே அரச தரப்பை ஆட்டம் காண வைக்கும் சூழ்நிலைகளை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளதென்ற அபிப்பிராயத்தை தோற்றுவித்துள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 06 புதன்கிழமை**
**பிலவ வருடம் - மார்கழி - 22**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 1.30 - 3.00**
**திதி : சதுர்த்தி**




**மேடம்**
உங்களது முயற்சி காரணமாக கனவு ஒன்று நனவாகும். சகபணியாளர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து உதவுவர். பல நாளாக இழந்திருந்த நிம்மதி மீளும். பயம் நீங்கும்.

**இடபம்**
புதிய முதலீடுகளை கவனமாக செய்வீர்கள். சொத்து வாங்குவது பற்றி புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பயம் தீரும். பணியில் அலட்சியம் வேண்டாம்.

**மிதுனம்**
நண்பரிடம் குடும்ப விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள். திட்டமிட்ட விஷயம் ஒன்றில் வெற்றி பெறுவீர்கள். எதையும் இரு முறை யோசித்துச் செய்வது நல்லது.

**கடகம்**
அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனையை பெறுவது நல்லது. குழந்தைகள் பற்றிய பயமும் கவலையும் குறைய ஆரம்பிக்கும். அவசியமின்றித் தாழ்வு மனப்பான்மை வருவதை தவிருங்கள்.

**சிம்மம்**
முயற்சியில் வெற்றி உண்டு. மனதில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளின் திருமணம் குறித்து நல்ல முடிவு வரும். தந்தையின் தேவையை நிறைவேற்றி அவரது ஆசியை பெறுவீர்கள்.

**கன்னி**
உறவினரால் முன்பு ஏற்பட்டிருந்த தொல்லை நீங்கும். நண்பர்களால் எதிர்பாராத நன்மை ஒன்றை அடைவீர்கள். மன நிறைவு ஏற்படும். புதிய ஒப்பந்தம் ஒன்று போடுவீர்கள்.

**துலாம்**
உறவினரால் ஆதாயம் உண்டு. செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நண்பர்களிடம் கேட்ட பண உதவி கிடைக்கும். முயற்சி ஒன்றிற்கு உறவினரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருட்சிகம்**
பணியிடத்தில் சிறப்பாக செயல்பட்டு பாராட்டு வாங்குவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகி நிம்மதி தரும். பணக்கவலை தீரும். உங்களது முயற்சியால் சிறு சிறு பிரச்னைகள் முடிவுக்கு வரும்.

**தனுசு**
சகோதரர் உங்களுக்கு உதவ முன்வருவார். தடைகள் நீங்கும். உங்களுடன் இணைந்து செயல்பட சகபணியாளர்கள் முன்வருவார்கள். உங்களது முயற்சியால் சிறு சிறு பிரச்னைகளை தீர்ப்பீர்கள்.

**மகரம்**
சொத்து வாங்குவது பற்றி இருந்த கவலைகள் நீங்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து வளத்தைக் காண்பீர்கள். நல்ல மாற்றம் வரும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும்.

**கும்பம்**
நெருங்கிய உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினரின் ஆதரவு கிடைக்கும். குழந்தைகளின் வாழ்வில் வளம் ஏற்பட்டு மகிழ்ச்சி அளிக்கும்.

**மீனம்**
பணியிட வளர்ச்சிக்காக நீங்கள் எடுத்த முயற்சிகள் வெற்றி தரும். நீண்ட நாளாக நீங்கள் எதிர்பார்த்த சுபச்செலவு வரும். பணியாளர்கள் கடமைகளை கருத்துடன் செய்தால் நன்மை வரும்.

# தேடப்பட்ட தமிழக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கர்நாடகாவில் கைது

*சென்னை, ஜன. 06*

வேலை வாங்கி தருவதாக பண மோசடி செய்த வழக்கில் தேடப்பட்டு வந்த முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி நேற்று கர்நாடகாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.



முன்னாள் பால்வளத் துறை அமைச்சரும், விருதுநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலருமான கே.டி.ராஜேந்திரபாலாஜி ஆவின் மற்றும் அரசுத்துறைகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பலரிடம் ரூ.3 கோடி வரை மோசடி செய்தாரென புகார் எழுந்தது.

இதுதொடர்பாக விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு பொலிஸ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த வழக்கில் முன்ஜாமீன் கிடைக்காமல் போக, கடந்த மாதம் விருதுநகரில் நடைபெற்ற அ.தி.மு.க-வின் கண்டன ஆர்ப்பாட்டத்தை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு கிளம்பிய ராஜேந்திர பாலாஜி தலைமறைவானார். தலைமறைவான அவரை பிடிக்க 8 தனிப்படைகள் அமைத்து விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறை தேடிவந்தது.

அவரை பிடிக்க, அவரது உறவினர்கள், நெருங்கிய நட்பு வட்டத்தினர், நெருங்கிய கட்சிப் பிரமுகர்கள் உள்ளிட்டோரிடமும் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்திவந்தனர். கேரளா, பெங்களூரு, சென்னை, கோவை, திருச்சி பாண்டிச்சேரி திருப்பதி திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் தனிப்படை முகாமிட்டு தேடி வந்தனர். சுமார் 20 நாட்கள் தேடுதலுக்கு பிறகு, கர்நாடகாவில் ராஜேந்திர பாலாஜியை தனிப்படை பொலிஸார் கைது செய்துள்ளனர். கர்நாடகாவின் ஹசன் பகுதியில் தங்கியிருந்த அவர் கைதாகியுள்ளார். இதையடுத்து காவல்துறை வாகனத்தில் அவரை தமிழ்நாடு கொண்டு வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தலைமறைவாக இருந்த போதே முன்பிளை கேட்டு ராஜேந்திர பாலாஜி விண்ணப்பித்திருந்தார். கடந்த மாதம் 17ஆம் திகதி அவரின் முன்ஜாமீன் மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தள்ளுபடி செய்த நிலையில், டில்லி உச்ச நீதிமன்றத்தில் முன்பிணை மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு இன்று விசாரணைக்கு வரவிருந்த நிலையில் நேற்று அதிரடியாக தனிப்படை அவரை கைது செய்துள்ளது.

## வேதா இல்லம்:

# அ.தி.மு.க மேன்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்

*சென்னை, ஜன. 06*

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வேதா நிலையம் இல்லத்தை நினைவு இல்லமாக மாற்றும் வகையில் கையகப்படுத்திய உத்தரவுகளை ரத்து செய்ததை எதிர்த்து அ.தி.மு.க. தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை சென்னை உயர் நீதிமன்றம், தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.



மறைந்த முதல்வர் ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் தோட்டத்தில் உள்ள வேதா நிலையம் இல்லத்தை, நினைவு இல்லமாக மாற்றுவதற்காக, கையகப்படுத்தி முந்தைய அ.தி.மு.க. அரசு பிறப்பித்த உத்தரவுகளை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி சேஷசாயி, கடந்த நவம்பர் 24ஆம் திகதி தீர்ப்பளித்திருந்தார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா நினைவு இல்ல அறக்கட்டளை உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சி.வி.சண்முகம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில், மூன்றாம் நபர் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் பரேஷ் உபாத்யாய் மற்றும் சத்திகுமார் சுகுமார குருப் அமர்வு, தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தது. அதன் மிதான திர்ப்பு இன்று வெளியானது,

நிலம் கையகப்படுத்தும் நடைமுறைகளை ஆய்வு செய்ததில் தனியார் சொத்து என்ற முறையில் அதன் உரிமையாளரின் கருத்தை கவனத்தில் கொள்ளாமல், அவர்களின் நிலையை ஏற்றுக்கொள்ளாமல் வேதா நிலையத்தை கையகப்படுத்தியதில் தவறுகள் நடந்துள்ளது என்ற தனி நீதிபதி உத்தரவில் தவறில்லை என நீதிபதிகள் உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர். அமைச்சர் சி.வி.சண்முகம் ஆகியோரின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழகத்தில் ஊரடங்கு

## அமைச்சர் மா. சுப்பிரமணியன் தகவல்

தமிழகத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட உள்ளதாக மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்

உருமாறிய ஒமைக்ரோன் வகை கொரோனா தொற்று பரவலானது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் ஒமைக்ரோன் பாதிப்பை கட்டுப்படுத்த மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கொரோனா தடுப்பிற்கான புதிய கட்டுப்பாடுகள் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி னார்.

சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் இறையன்பு, சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனை முடிந்த பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்கூறியதாவது;-

“ கொரோனா பரவல் காரணமாக தமிழகத்தில் ஞாயிற்றுக் கிழமை முழு ஊரடங்கு அமுல் படுத்தப்படும். ஞாயிற்றுக் கிழமை முழு ஊரடங்கு என்பதால் சனிக்கிழமை கொரோன தடுப்பூசி முகாம்கள் செயல்படும்” என்றார்.

ஈழநாடு



# நெல்லியடி பஸ் நிலையத்தில் வைத்து இ.போ.ச. பஸ்ஸை தாக்கியது கும்பல்!

## சாரதி, நடத்துநர் ஆகியோரும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி; ஒருவர் கைது




யாழ்ப்பாணம், ஜன. 06

**யாழ்ப்பாணம்-கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் மீதும் அதன் சாரதி மற்றும் நடந்துநர் மீதும் தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.**

நெல்லியடி பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இ.போ.ச பஸ்ஸை இடைமறித்த கும்பல் ஒன்று பஸ் மீதும் சாரதி மற்றும் நடத்துநர் மீதும் தாக்குதல் மேற்கொண்டது.

இதனால் சாரதி, நடத்துனர் ஆகியோர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், ஏனைய நபர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை , பருத்தித்துறை - திருகோணமலைக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் மீது நெல்லியடி, புறாப்பொறுக்கி சந்திப் பகுதியில் வைத்து இனம் தெரியாத கும்பல் கல் வீசித் தாக்குதலை மேற்கொண் டுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை 3.45 மணியளவில் இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தில் பஸ்ஸின் முன் பக்க கண்ணாடிகள் சேத மடைந்தன.

சம்பவம் தொடர்பில் சாரதி யால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-2-3)

## இளைஞர் கொலை; 6 இளைஞர்கள் கைதாகினர்

கொழும்பு, ஜன. 06

ரிக்ரொக் காணொலி தொடர்பாக ஏற்பட்ட தகராறில் கிராண்ட்பாஸ், மாதம்பிட்டிய பகுதியில் 17 வயது இளைஞர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் 16 முதல் 17 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என தெரிவிக்கப்பட்டது.

ரிக்ரொக் காணொலியால் ஏற்பட்ட தகராறையடுத்து, குறித்த இளைஞர் மேலும் இரு வருடன் வீதியில் சென்று கொண்டிருந்தபோது மற்றொரு குழு அவரை தாக்கியுள்ளது.

மேலும் இதன்போதே, சந்தேகநபர்கள் அவரை கத்தியால் குத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும் அதன்பின்னர், படுகாயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## அமைச்சர்கள் இனி வீதிகளில் செல்லமுடியாத நிலை வரும்!

### நாமல் கருணாரத்ன கூறுகிறார்



கொழும்பு, ஜன. 06

“அரசுமீது மக்கள் கடும் சீற்றத்தில் உள்ளனர். ஆளுங்கட்சியினருக்கு இனிவரும் நாட்களில் வீதிகளில் செல்லமுடியாத நிலைமைகூட ஏற்படும்.”-என்று அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளரான நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் விவசாய நிலம் சீரழிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கடும் சீற்றத்துடன் வீதியில் இறங்கி போராடுவரு கின்றனர். மறுபுறத்தில் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதேபோல பொருட்களை வாங்குவதற்கு வரிசையில் நிற்கவேண்டிய நிலை. அவ்வாறு நின்றாலும் பொருட்கள் இல்லை. இவ்வாறு நாடு படுமோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அரசுமீது மக்கள் கடும் சீற்றத்தில் உள்ளனர். அமைச்சர்களுக்கு எதிர்காலத்தில் வீதிக ளில் இறங்கி செல்லமுடியாத நிலை ஏற்படும். இவ்வாறான தொரு பின்புலத்திலேயே புத்தாண்டும் வந்துள்ளது. வரிசை, நெருக்கடி, தட்டுப்பாடு உள்ளிட்டவற்றையே அரசு மக்களுக்கு பரிசாக வழங்கியுள்ளது - என்றார்.

அதேவேளை, தற்போதைய நெருக்கடி நிலைமைகூடிய விரைவில் நிவர்த்தி செய்யப் படும் என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட் டுள்ளனர். (அ)

## பசுமை விவசாயத் திட்டத்துக்காக இலங்கைக்கு ஐ. நா. சபை பாராட்டு



கொழும்பு, ஜன. 06

இலங்கையின் பசுமை விவ சாய வேலைத்திட்டத்துக்கு, ஐக்கிய நாடுகள் சபை பாராட்டு களைத் தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் திருமதி கனி விக்னராஜாவுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கும் இடையில், நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமதி கனி விக்னராஜா, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் உதவி நிர்வாகி மற்றும் ஐக்கிய நாடு களின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணியகத்தின் பணிப்பாளராகவும் செயற்படுகிறார்.

கடந்த வருடத்துடன் ஒப் பிடும் போது, 2021 பேண்தகு அபிவிருத்தி அறிக்கையின்படி இலங்கை மேலும் ஏழு புள்ளி களைப் பெற்று, 165 நாடுகளில் 87ஆவது இடத்தைப் பெற்றுள்ளதென, திருமதி விக்னராஜா சுட்டிக்காட்டினார்.

இந்நிலைமையை மேலும் மேம்படுத்தி, பசுமை விவசாய வேலைத் திட்டத்துக்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார பாதிப்புகள் தொடர்பில் உரையாற்றும் போது, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக இலங்கை முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

“காலநிலை மாற்றத்துக்கு நிலையான தீர்வுகளுடன் கூடிய பசுமை இலங்கையை உருவாக்குவதற்கான ஜனாதிபதிச் செயலணி மற்றும் “பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான செயலணி உள்ளிட்ட முறையான கட்டமைப்பு ஒன்று இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதென, ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரொபர்ட் ஜூஹ்காம், பிரதி வதிவிடப் பிரதிநிதி மாலின் ஹெர்விக் , ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## வடக்கு விவசாயிகள் நெல் அறுவடையை முற்கூட்டியே திட்டமிடுவது மிகச்சிறந்தது

யாழ்ப்பாணம், ஜன. 06

அடுத்தவாரம் மழையை எதிர்பார்க்க முடியும் என்பதால் விவசாயிகள் நெல் அறுபடையை முன்கூட்டியே திட்டமிடுவது உகந்தது என யாழ்.பல்கலைகழக புவியியல்துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்-

வடமாகாணத்தில் தற்போது பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. எனினும் எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் மித மானது தொடக்கம் கனமானது வரை மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

தற்போதைக்கு வடமாகாணத்தின் உள்நில பகுதிகளில் குறிப்பாக ஏ-9 வீதியை அண்மித்த பகுதிகளில் இரவு வெப்பநிலை 17 செல்சியஸ்வரை குறைவடையகூடிய சாத்தியகூறுகள் உள்ளன-என்றார். (அ)

## ராஜிதவுக்கு கொரோனா!

கொழும்பு, ஜன. 06

முன்னாள் சுகாதார அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்னவுக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, அவருக்கு வீட்டிலேயே வைத்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி முதலாம் திகதி முதல் ராஜித எம்.பி.யுடன் தொடர்பில் இருந்த சகலரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசை விமர்சிப்போர் குறித்து மிகவிரைவில் உரிய தீர்மானம்

## நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 06

**“ஒழுக்காற்று காரணிகளை கருத்தில்கொண்டே பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம்ஜயந்த இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அரசை விமர்சித்துள்ள ஏனைய அமைச்சர்கள் குறித்தும் எதிர்வரும் நாட்களில் உரிய தீர்மானம் முன்னெடுக்கப்படும். அமைச்சரவை உறுப்பினர்கள் மாத்திரமல்ல, ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுப்பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

கோவிட் 19 வைரஸ் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் அரசு பாரிய நிதி நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளது. பொருளாதார ரீதியில் நாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்பதை ஏற்கின்றோம்.



எனவே, நாட்டு மக்களுக்கு நிவாரம் வழங்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் கட்டம் கட்டமாக செயல் படுத்தப்படும்.

முதல்கட்டமாக அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் மேலதிக கொடுப்பனவு, இறக்குமதி செய்யப்படும் உணவு பொருட்கள்மீதான வரி நீக்கம் உள்ளிட்ட பல நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளன. மக்கள் எதிர்ப்பார்த்த மாற்றம் விரைவில் நிறைவேறும்.

அதேவேளை, அரசு எடுக்கும் தீர்மானங்களில் குறைப்பாடுகள் காணப்படின், அதனை சுட்டிக் காட்டும் உரிமை ஆளுங் கட்சியினருக்கு இருக்கின்றது. அதற்கு பொருத்தமான இடங் களும் உள்ளன. அதைவிடுத்து கூட்டு பொறுப்பைமீறும் வகையில் செயல்படக்கூடாது-என்றார். (அ)

# கொரோனா தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 06

கொரோனா தடுப்பூசி அட்டையை பொது இடங்களில் கட்டாயமாக்குவதற்கான தொழில்நுட்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதற்கமைய, கியூ.ஆர் குறியீடு மற்றும் விண்ணப்பத்தை வழங்குவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உடனான கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தடுப்பூசிகளை கட்டாயமாக்க முடியாத நிலையில், பொது இடங்களுக்கு பிரவேசிக்கும்போது தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்க முடியும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# வர்த்தக வங்கிகள் குறித்து வெளியான தகவல் பொய்

## மத்திய வங்கி ஆளுநர் விளக்கம்

கொழும்பு, ஜன. 06

இலங்கை வர்த்தக வங்கிகளில் உள்ள வாடிக்கையாளர்களின் அந்நிய செலாவணி கணக்குகளில் உள்ள நிலுவைகளை வலுக்கட்டாயமாக மாற்றுமாறு மத்திய வங்கியினால், வர்த்தக வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் வெளியாகி வருவதாக அவர் மேலும் கூறினார்.

இலங்கை வர்த்தக வங்கிகளில் உள்ள வெளிநாட்டு நாணய வைப்பாளர்களின் கணக்குகளில் உள்ள வைப்புத் தொகைகளில் 25 வீதம் உள்ளூர் நாணயங்களாக மாற்றப்பட வேண்டும் என மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைதான இந்திய மீனவர்கள் 12 பேர் மன்னார் நீதிமன்றத்தால் விடுதலை!

மன்னார், ஜன. 06

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரையும் மன்னார் நீதிமன்றம் விடுதலை செய்தது.

கடந்த 18ஆம் திகதி அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 12 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த படகுகள் இரண்டும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றபோது அவர்களை நிபந்தனைகளுடன் மன்னார் நீதிமன்றம் விடுதலை செய்தது. (அ)

# கொரோனா நோயாளர் எண்ணிக்கை இரண்டு வாரங்களில் நிச்சயம் உயரும்

## பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 06

எதிர்வரும் இரண்டு வாரங்களில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை நிச்சயமாக அதிகரிக்கும் என பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, ஒமைக்ரோன் பரவலின் அச்சுறுத்தல் மற்றும் விடுமுறை காலங்களில் மக்களின் கவனக் குறைவான நடத்தை காரண மாக நோயாளர்களின் எண் ணிக்கை அதிகரிக்கும்.

நாடு முழுவதும் பல பகுதிகளில் இருந்து ஒமைக்ரோன் நோயாளர்கள் கண்டறியப்பட்டு முழு தீவுக்கும் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

மறுபுறம் பொது மக்கள் ஒமைக்ரோன் பரவலை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லையென்பது அண்மைக்கால விடுமுறை நாட்களில் மக்கள் செயல்பட்டதில் தெளிவாகிறது.

தற்போது ஒமைக்ரோன் சமூகத்தில் பரவத் தொடங்கியதால், சிந்தப்பட்ட பாலுக்காக அழுவது அபத்தமானது.

எனவே, நாட்டில் ஒரு பெரிய வெடிப்பைத் தடுக்க, பூஸ்டர் டோஸைப் பெறுவதும் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதும் முக்கியமானது.

இருப்பினும், வழக்குகளில் குறிப்பிடத்தக்க எழுச்சி இப்போது தவிர்க்க முடியாததாகிவிட்டது-என்றார். (அ)

# சீனாவின் நச்சு கப்பலுக்கு நட்டஈடு விவசாயிகளுக்கு எதுவுமே இல்லை

## போர்க்கொடி தூக்கும் பொலநறுவை விவசாயிகள்

கொழும்பு, ஜன. 06




பூமியில் நச்சு கலக்க முயன்ற சீனாவின் உரக்கப்பலுக்கு நட்டஈடு செலுத்தும் அரசாங்கம், விவசாயிகளுக்கு நட்டஈடு தர மாட்டேன் என்பது எந்த வகையில் நியாயமென பொலனறுவை விவசாயிகள் அமைப்பு அமைச்சர் மஹிந்தானந்தவிடம் கேள்வியெழுப்பியுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம் எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

பொலநறுவையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பொலநறுவை பராக்கிரம சமுத்திர அளுத்வெவ கிழக்கு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் பி.கே.டி.விஜேரத்ன -

பூமிக்கு விஷம் கலந்த சீன உரக் கப்பலுக்கு இழப்பீடு வழங்க அரசு தயாராக உள்ளது. இந்த இழப்பீட்டை இந்நாட்டு மக்கள் செலுத்துகிறார்கள். விவசாய அமைச்சர் இந்த நாட்டில் விவசாய சமூகத்தின் அவலத்துடன் விளையாடுகிறார். உரங்கள் மற்றும் நைதரசன் இல்லாமல், பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறும். இந்தப் பயிரில் முன்பு கிடைத்த விளைச்சலைப் பெற முடியாது. அது மிகவும் தெளிவாக உள்ளது. எனவே, விவசாய அமைச்சருக்கு நாம் கூறுகின்றோம், பொய்யான தற்பெருமைகள் வேண்டாம். நெல் விவசாயத்தினால் இவ் விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்துக்கு நியாயமான நட்டஈட்டை வழங்க தயாராக இருங்கள். அந்த இழப்பீட்டைப் பெற அனைத்து விவசாயிகள் அமைப்புகளையும் அனைத்து விவசாயிகள் சமூகங்களையும் ஒரே இடத்தில் ஒன்றிணைப்போம். நீங்கள் பணம் செலுத்தவில்லை என்றால், நாங்கள் உங்களிடம் வருவோம். அந்நாளில் உங்கள் வீடுகள் விவசாயிகளால் சூழப்படும்-என்றார். (அ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கும் ரூ. 5000 கொடுப்பனவு வேண்டும்

## வடிவேல் சுரேஷ் கோரிக்கை

கொழும்பு, ஜன. 06

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் 5,000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கையை நிதி அமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலரும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டதால் மலையக பெருந்தோட்ட மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் கோதுமைமாவின் விலையை குறைக்குமாறும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் நான் பல தடவைகள் வலியுறுத்தினேன். பாராளுமன்றத்திலும் உரையாற்றினேன்.

தற்போது கோதுமை மா நிவாரண விலையில் வழங்கப்படவுள்ளது. இது காலம் கடந்த ஞானம். இருந்தாலும் வரவேற்கின்றோம். அதேபோல அத்திட்டம் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல ஏனைய பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 5 ஆயிரம் கொடுப்பனவு முறையாக கிடைப்பதில்லை. எனவே, அவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# இவ்வருடம் 690 கோடி டொலர்களை கடனாக செலுத்தவேண்டும் இலங்கை!



## அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தகவல்

கொழும்பு,ஜன.06

**இலங்கை இந்த ஆண்டில் 6.9 பில்லியன் அமெ ரிக்க டொலர்களை கடனாக செலுத்த வேண்டியுள்ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**இந்த விடயம் குறித்து சிங்கள வார இதழொன்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நடப்பு அரசாங்கத்தினால் குறித்த கடனை உரிய முறையில் திருப்பி செலுத்த முடியும் எனவும் பஸில் குறிப்பிட்டுள்ளார்.

செலுத்தப்படவேண்டிய கடன் தவணைகள் இதுவரை எவ்வித பிரச்னையும் இன்றி செலுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்திலும் இவ்வாறே செயற்படுவதாகவும் நிதி அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

கடன் செலுத்தப்படும் அதே வேளை, மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்ற நடவடிக்கைகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுமெனவும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# ஊழல் இல்லாத ஆட்சி அவசியம்



## வலியுறுத்துகின்றார் அநுரகுமார

கொழும்பு, ஜன. 06

ஊழல் இல்லாத நாட்டைக் கட்டியெழுப்ப பொது நிலைப்பாடு ஒன்று அவசியம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1994 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் மக்கள் பொருளாதார அடிப்படையிலோ பொருளாதார பிரச்னைக்காகவோ அரசாங் கத்தை தெரிவு செய்யவில்லை.

ஆனால் தற்போது பொருளாதாரம் சீர்குலைந்துள்ளமையினாலேயே மக்கள் அரசாங்கத்தை மாற்றவேண்டும் என கோருகின்றனர்.

ஆகவே நாட்டை கட்டியெழுப்ப ஊழல் இல்லாத ஆட்சி அவசியம் - என்றார். (அ)

# பஸ் கட்டணங்கள் நேற்று முதல் உயர்வு

கொழும்பு, ஜன. 06

பயணிகள் பஸ்களுக்கான சேவைக்கட்டணம்17.44 சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பது நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

புதிய கட்டணத் திட்டம் தனியார் பஸ்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களுக்கும் பொருந்தும்.


அதன்படி 14 ரூபாயாக இருந்த குறைந்தபட்ச பஸ் கட்டணம் நேற்று முதல் 17 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

ஆயிரத்து 109 ரூபாவாக இருந்த அதிகபட்ச பஸ் கட்டணம் ஆயிரத்து 303 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிகமாக கட்டணம் வசூலிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பஸ் பயணிகளுக்கு இயன்றளவு பணப்பரிமாற்ற நாணயங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வழங்கினால் பிரச்னைகளை குறைப்பது இலகுவாக இருக்கும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார். (அ)

# விடுதியொன்றில் வெடிப்பு சம்பவம் ஒருவர் உயிரிழப்பு



கொழும்பு, ஜன. 06

கண்டியில் அமைந்துள்ள விடுதியொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விடுதியின் உணவகத்தில் உள்ள வளி சீராக்கி ஒன்றை பழுது பார்க்கும்போது இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்க!

## கிளிநொச்சி மகாவித்தியாலய சமூகம் கோரிக்கை





கிளிநொச்சி, ஜன. 06

பாடசாலை ஆரம்பிக்கும், முடிவுறும் நேரங்களில் ஏற்படும் நெரிசலை கட்டுப்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என கிளிநொச்சி மகா வித்தியாலய சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள குறித்த பாடசாலையானது வடக்கு மாகாணத்தில் அதிக மாணவர் தொகை கொண்ட பாடசாலையாக உள்ளது. 2500 மாணவர்கள் வரை கல்வி கற்கும் அந்த பாடசாலையில் தரம் 1 முதல் உயர் தரம் வரையான மாணவர்கள் கல்வி கற்பதுடன், நீண்ட வரலாறு கொண்ட பாடசாலையாவும், சாதனைகள் பல புரிந்த பாடசாலையாகவும் திகழ்கின்றது.

இந்த பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் நிறைவுறும் நேரங்களில் பாரிய நெருக்கமான நிலை காணப்படுகின்றது. ஏ-9 வீதியிருந்து 25 மீற்றர் உட்பகுதியில் காணப்படும் இந்த பாடசாலை, வட்டக்கச்சி செல்லும் பிரதான பாதையில் அமைந்துள்ளது.

இந்த வீதி தற்போது புனரமைப்பு செய்யப்பட்டுள்ள போதிலும், அதன் அகலம் சுமார் 3 மீற்றர் மாத்திரமே உள்ளது. இதேவேளை சில அரச திணைக்களங்களும் இந்த வீதியில் அமைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் பாரிய நெரிசல் குறித்த பகுதியில் ஏற்பட்டுள்ள நிலையில், நெரிசலை கட்டுப்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பெற்றோரும், பாடசாலை சமூகமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியை குறிப்பிட்ட நேரங்களில் ஒருவழி பாதையாக்குதல், அக்காலப்பகுதியில் கனரக வாகனங்களின் போக்குவரத்தை கட்டுப்படுத்தல், வீதியை மேலும் விஸ்தரித்தல், மாணவர் நடைபாதையை அமைத்தல், வாகனங்களை பாதையிலிருந்து விலகி உரிய முறையில் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் போன்றவற்றால் குறித்த நெரிசலை கட்டுப்படுத்த முடியும்.

பல்வேறு துறைசார்ந்தவர்களின் பிள்ளைகளும் குறித்த பாடசாலையில் கல்வி கற்று வரும் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ

# 5000 ரூபா நிவாரணம் மக்களுக்கு போதாது

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜன. 06

கடும் சிரமத்துக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு ஐக்கிய மக்கள் சக்தி வரவேற்பு தெரிவித்துள்ளது.

இருப்பினும் இந்த ஆண்டு உணவுக்கான பணவீக்கம் இரட்டிப்பாக அதிகரித்துள்ள நிலையில் 5000 ரூபாய் நிவாரணம் போதாது என் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பொருட்களின் விலை அதிகரிக்கப்படும்போது சம்பளத்தையும் அதிகரிக்கவேண்டியதே பொருளாதாரக் கோட்பாடு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் ஒரு தரப்பினருக்கு மட்டுமே சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இது மற்றைய மக்களுக்கு செய்யும் அநீதி என்றும் ஹர்ஷ டி சில்வா குற்றம் சாட்டினார். (அ)

# சுசிலுடன் மஹிந்த பேச்சு



கொழும்பு, ஜன. 06

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் பிரதமர் தன்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார் என சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில், சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கம் செய்யப்பட்டதாக நேற்று முன்தினம் மாலை முறைப்படி எழுத்து மூலம் அவருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. (அ)

# சுசிலை பதவிநீக்குவதன் மூலம் பிரச்னைகளை தீர்க்கமுடியாது

## கூறுகின்றார் மைத்திரிபால

கொழும்பு, ஜன. 06

இராஜாங்க அமைச்சர் ஒருவரை நீக்கி அனைத்துச் சம்பவங்களுக்கும் தீர்வு காண முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்தவை இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் தொடர்பில் மாத்தளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்தால் உள்ளக பிளவுகளை தடுக்க முடியும்.

சுசில் பிரேமஜயந்தவை விட அரசாங்கத்தை விமர்சித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா ஏன் இதுவரை பதவியில் இருந்து நீக்கப்படவில்லை என்பதற்கான காரணம் எனக்கு தெரியும்.

பிரித்தானிய காலனித்துவ காலத்தை விட விவசாய சமூகமும் விவசாயத் தொழிலும் முன்னெப்போதும் இல்லாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு கசிவு தொடர்பில் இதுவரை முறையான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. லிட்ரோ எரிவாயு தலைவரையோ அல்லது பணிப்பாளர் சபையையோ பதவி விலகுமாறு கோரவில்லை - என்றார். (அ)




# தமிழ் மக்களிடம் திணிக்கப்படும் சீன எதிர்ப்புவாதம்!

**சீனாவோ, அமெரிக்காவோ, இந்தியாவோ தமிழ் மக்களின் பிரச்னைகளை மனிதாபிமான அடிப்படையிலோ, ஜனநாயக அடிப்படையிலோ நோக்கியதுமில்லை நோக்கப் போவதுமில்லை.**

**நா.யோகேந்திரநாதன்**

அண்மையில் சென்னையிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சியின் "நேர்படப் பேசுதல்" என்ற நிகழ்ச்சியில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் இந்தியா தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்குமானால் தாங்கள் இங்கு சீனாவைக் காலூன்ற விடப் போவதில்லையெனத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற வகையில் தமிழ் மக்கள் சார்பில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தை எதிர்த்து வருவதாகவும் மனித உரிமைகள், ஜனநாயகம் என்பன தொடர்பாக சீனா பலவீனமான போக்கைக் கொண்டிருப்பதால் தங்களால் அந்த நாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் தெரிவித்திருந்தார்.

இப்படியான ஒரு கருத்தைச் சுமந்திரன் வெளியிட்டது தொடர்பாகவும் ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எவர் ஒருவருமே ஆட்சேபனை தெரிவிக்காமையும் பெரிதாக ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல. சேர்.பொன்.இராமநாதன் காலத்திலிருந்து சம்பந்தன் காலம்வரை தமிழ் அரசியல் தலைமைகள் ஒரு மேட்டுக்குடி அரசியலையே முன்னெடுத்து வந்தனர் என்பதும் ரஷ்யா, சீனா போன்ற பொதுவுடமைக் கொள்கைகளைக் கொண்ட நாடுகள் மீது வெறுப்பைக் கொட்டி வந்தனர் என்பதும் மறந்து விட முடியாது. ஏனெனில் அவர்கள் காலம்காலமாக சிங்கள மேட்டுக்குடி அரசியலுடன் நல்லறவைப் பேணி வந்த அதேவேளையில் இடதுசாரிகளுடனும், சிங்கள தேசிய சக்திகளுடனும் ஏனைய முற்போக்கு சக்திகளுடனும் விரோத அரசியலையே முன்னெடுத்து வந்தனர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் என்றாலென்ன, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியென்றாலென்ன ஐ.தே.கட்சி ஆட்சியிலிருக்கும் போது ஒரு சமரச அரசியலையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருக்கும் போது எதிர்ப்பு அரசியலையும் முன்னெடுத்து வந்தமை வரலாறாகும். அதுமட்டுமன்றி சமசமாஜக் கட்சி தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கோரியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி - பிரதேச சுயாட்சி கோரியும் போராட்டங்களை நடத்தியபோதும் தமிழ்த் தலைமைகள் அவர்களுடன் இணைந்து செயல்பட மறுத்து அவர்களுக்கு எதிரான பிரசாரங்களையே மேற்கொண்டு வந்தனர்.

இனப்பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாகக் கருதப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தும், தமிழ் மக்களுக்கு உயிரழிவு உட்படப் பேரழிவுகளை ஏற்படுத்தி 1958 கலவரத்தைத் தலைமை தாங்கி நடத்தியது ஐக்கிய தேசியக் கட்சி. ஆனால் 1965 இல் தமிழ்த் தலைவர்கள் ஐ.தே.கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்து அமைச்சுப் பதவியும் பெற்று உறவு கொண்டாடினர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் மக்கள் அர்ப்பணிப்புடன் பங்கு கொண்ட போதிலும் அத்தியாகங்கள் மேட்டுக்குடி அரசியலுக்குக் காவு கொடுக்கப்பட்டன என்பதை எவருமே மறுத்து விடமுடியாது.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு 2009ல் புலிகள் களத்தில் இல்லாமற் போன பின்பு தமிழ் மேட்டுக்குடி அரசியலின் குவி மையமாகியது. முற்போக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் உறுதியாக நின்ற பலர் வெளியேற்றப்பட பிற்போக்கு சக்திகள் உள் நுழைந்து த.தே.கூட்டமைப்பின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

அதன் விளைபலனே தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.

கடந்த சில வாரங்களின் முன்பு எரிசக்தி அமைச்சர் உதயன் கம்மன்வில அவர்கள் மன்னார் வளை குடாக் கடலில் எரிவாயு இருப்பதாக ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதை பொருத்தமான நிறுவனத்திடம் உரிய முறையில் குத்தகைக்கு விடப்பட்டால் இலங்கையில் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடிகள் முற்றாக நீங்கி விடுமெனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில்தான் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இனப் பிரச்னை தொடர்பாக விசேட அக்கறை செலுத்த ஆரம்பித்துள்ளன. அதே போன்று அண்மையில் இடம்பெற்ற சீனத் தூதுவரின் வடபகுதி விஜயம், அடுத்த மாதம் இலங்கை வரவுள்ள சீன வெளியுறவு அமைச்சரின் வருகை என்பனவற்றுக்கும் மன்னார் எரி வாயுவை இலக்கு வைப்பதற்கும் சம்பந்தமில்லையெனக் கூறிவிட முடியாது.

அதேவேளையில் கெரவலப்பிட்டி மின் நிலையத்தின் 40 வீதப் பங்கையும் இலங்கைக்கான எரிவாயு விநியோகத்தையும் அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்படுவதற்கான 'யுகதனவி' ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு எதிராக நாடுபரந்த எதிர்ப்பு உருவாகியுள்ளது. எரிவாயு விநியோக உரிமையின் அடுத்த கட்டமாக மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள எரிவாயுவை அமெரிக்க நிறுவனம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் சாத்தியம் இல்லையென்று கூறிவிட முடியாது. எனவேதான் தங்கள் அமைச்சுப் பதவிகள் பறிபோகக் கூடிய நிலைமையிலும் அமைச்சர்களான உதய கம்மன்வில, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் 'யுகதனவி' ஒப்பந்தத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இப்படியான ஒரு நிலையில் தான் அமெரிக்கா இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகப் பேச்சுகளை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்திருந்தது. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோ இன்றி சுமந்திரனும் வேறு இரு சட்டத்தரணிகளுமே த.தே.கூட்டமைப்பின் பேரில் கலந்து கொண்டனர்.

அதையடுத்துச் சுமந்திரன் சீனா தொடர்பான கர்ணகடூரமான எதிர்க் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

இறுதிப் போரின் போது சீனா இலங்கை அரசாங்கத்துக்கு உதவிகளை வழங்கியே விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்படத் துணைபோனதென்ற குற்றச்சாட்டு சீனா மீது சுமத்தப்பட்டது. இறுதிப் போரில் சீனா இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கியது உண்மை. சீனா ஓர் ஆயுத வியாபாரி என்ற வகையில் இலங்கைக்கு மட்டுமின்றி வேறு பல நாடுகளுக்கும் ஆயுதங்களை வழங்கி வந்தது. தற்போதும் வழங்கி வருகிறது.

ஆனால் அமெரிக்கா புலிகளை பயங்கரவாத இயக்கமாகத் தடை செய்ததன் மூலம் விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச உறவுகளைப் பலவீனப்படுத்தியது. அது மட்டுமின்றி புலிகளின் கடல் போக்குவரத்து உட்படப் பல முக்கிய புலனாய்வுத் தகவல்களை இலங்கைக்கு வழங்கியதன் மூலம் புலிகள் இறுதிப் போரில் பின்னடைவு ஏற்பட வழி வகுத்தது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க தரப்பு மீண்டும் மீண்டும் இலங்கை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்குவதே இதுவரை இடம்பெற்று வந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை இறுதிப் போரில் இலங்கையுடன் ஒரு பங்காளியாகச் செயல்பட்டுப் போரை வழிநடத்தியது மட்டுமன்றி ஆயுத உதவி, ஆளணி உதவி, புலனாய்வுத் தகவல்கள், ராடர் தொழில் நுட்பவியலாளர்களின் பங்களிப்பென இலங்கையின் வெற்றிக்கு முழுமையாக உதவி செய்தது. இந்தியா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒருமுறை கூட இலங்கைக்கு எதிராக வாக்களித்ததில்லை.

எனவே சீனாவோ அமெரிக்காவோ இந்தியாவோ தமிழ் மக்களின் பிரச்னைகளை மனிதாபிமான அடிப்படையிலோ, ஜனநாயக அடிப்படையிலோ நோக்கியதுமில்லை நோக்கப் போவதுமில்லை.

யதார்த்தம் அப்படியிருக்கும்போது அமெரிக்காவின் குரலாகவோ, இந்தியாவின் கைப்பொம்மையாகவோ சீனாவை எதிர்ப்பது என்பது வலிந்து எமக்கென ஒரு வலிமையான எதிரியை உருவாக்கும் முட்டாள்தனமாகும். தொடர்ந்தும் எமது பிரச்னைகள் பூகோள, பிராந்திய வல்லாதிக்க சக்திகளால் தமது நலன்களின் அடிப்படையில் பயன்படுத்தப்படுபவையாகவே நீளும் பரிதாமமே நாம் எதிர்நோக்கும் முடிவாக அமையும்.

நாம் ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனம் என்ற அடிப்படையில் எந்தவொரு வல்லாதிக்க சக்திக்கும் விலைபோகாது எதிரிக்கும் எமக்குமிடையேயுள்ள முரண்பாடுகள் எம்மைப் பயன்படுத்த முனையும் மேலாதிக்க சக்திகளுக்கிடையே உள்ள முரண்பாடுகள் என்பவற்றைச் சரியாக இனம் கண்டு தந்திரோபாய அடிப்படையில் எமக்கும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதே ஒரே மார்க்கமாகும்.

**- அருவி** ■

# எங்கள் தேசத்தின் வடமராட்சி கதைசொல்லி



## மூத்த எழுத்தாளர் தெணியானுக்கு இன்று வயது 80

முருகபூபதி

கந்தையா நடேசன் என்ற இயற்பெயர் கொண்டவரும், இலக்கிய உலகில் தெணியான் என அழைக்கப்பட்டவருமான ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமையின் எண்பதாவது பிறந்ததினம் இன்று 06 ஆம் திகதி.

வடமராட்சி பொலிகண்டியில் கந்தையா - சின்னம்மா தம்பதியருக்கு 06-01-1942 இல் பிறந்த நடேசன், இலக்கிய உலகில் பிரவேசித்ததும் தெணியான் என்ற பெயரில் எழுதத்தொடங்கி, அதுவே நிலைத்துவிட்டது.

தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வட-கிழக்கு மகாண அமைச்சுப் பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவை - தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு, மற்றும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது ஆகியனவற்றுடன் இலங்கை அரசின் உயர் இலக்கிய கௌரவமான சாகித்திய ரத்னா விருதும் பெற்றிருப்பவர்.

இலங்கை வானொலிக்காக முன்னர் பல நாடகங்களும் எழுதியிருக்கும் தெணியான், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் விரிவான நூல்களை வரவாக்கியிருப்பவர்.

தெணியானின் 80 ஆவது பிறந்த தினத்தில், அவரது சுயசரிதைப் பாங்கில் அமைந்த 'இன்னும் சொல்லாதவை' நூல் பற்றிய எனது வாசிப்பு அனுபவத்தை சமர்ப்பிக்கின்றேன்.

நாவலாக எழுதியிருக்கவேண்டிய ஒரு படைப்பு சுயவரலாறாகியுள்ளது. தெணியான் ஒரு கதைசொல்லி. சிறுகதைகள், நாவல்கள் உட்பட சில தொடர்களும் கட்டுரைகளும் எழுதியிருப்பவர். அவரது எந்தவொரு படைப்பை உன்னிப்பாகப்பார்த்தாலும் அவர் ஒரு சிறந்த கதைசொல்லி என்ற முடிவுக்கே வாசகர்கள் வந்துவிடுவார்கள்.

'இன்னும் சொல்லாதவை' நுலைப் படித்தபோது எனக்கு உடனடியாக நினைவுக்கு வந்தவர் தமிழ்நாட்டின் கரிசல்கட்டுமைந்தன் கி.ராஜநாராயணன். அவரும் சிறந்த கதைசொல்லி. அத்துடன் பிரதேச மொழிவழக்குகளை அநாயசமாகவும் சுவாரசியமாகவும் சொல்லவல்லவர்.

தெணியான் எங்கள் தேசத்தின் வடமராட்சிக் கதைசொல்லி. இந்நூலின் பதிப்புரையில் பின்வரும் பந்தி எனக்கு முக்கியத்துவமாகப்பட்டது.

ஓர் எழுத்தாளனது புனைவுலகை தரிசித்து அதில் லயித்துக்கிடக்கும் வாசகனுக்கு அந்த எழுத்தாளனது சொந்த வாழ்வைப்பற்றிய இரகசியங்களை அறிந்துகொள்ளும்போது அந்த எழுத்தாளனைப்பற்றி உருவாக்கிவைத்திருக்கும் மனக்கோட்டை உடைந்து சிதறுவதே இயல்பு. இதனால்தானோ என்னவோ பல பிரபலங்கள் தங்களது சொந்த வாழ்வை வெளிப்படுத்துவதில்லை. தங்களது சுற்றம், நட்பு இவற்றின்மீது வெளிச்சம்படாமல் கவனமாகப்பார்த்துக்கொள்கின்றனர்.

இந்நிலைக்கு மாறாக தெணியானின் வாழ்வனுபவங்களை படிக்கும்போது அவர் மீதான நமது மதிப்பு பல மடங்கு கூடுகிறது. அவருடன் நெருக்கத்தை அதிகப்படுத்துகிறது.


கவியரசு கண்ணதாசன் ஒரு தடவை இப்படிச்சொன்னார்: மரத்தைப்பார். அதில் பூக்கும் மலர்களை, காய் கனிகளைப்பார். ரசிப்பாய். ஆனால், அந்த மரத்தின் வேரைப்பார்க்க முயலாதே. பிறகு, மரமும் இருக்காது உனது ரசனையும் பொய்த்துவிடும். ஒரு படைப்பாளியின் உள் அந்தரங்கம் ரசனைக்குரியதாக இருக்காது என்பதுதான் கவியரசுவின் கருத்து.

வெளிப்படையான மனிதராகவும் தனக்கு சரியெனப்பட்டதை துணிந்து சொல்லும் தன்னம்பிக்கையுடையவராகவும் பல தசாப்தகாலமாக எழுத்துலகில் இயங்கிவரும் தெணியான் தனது வாசகர்களுக்கு சொல்லவேண்டிய கதைகள் நிறையவுள்ளன.

அவர் இந்த நூலில் சொல்லியிருப்பவை சொற்பம்தான். ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் அவர் வாழ்ந்த வடமராட்சியும் மாந்தர்களும் குறிப்பாக பெற்றோர், சுற்றத்தவர் எப்படி வாழ்ந்தனர் என்பதை வாழ்வனுபங்களாக சித்திரிக்கின்றார்.

முகமூடியோடு பிறந்த தெணியான், வளர்ந்து பெரியவனாகியதும், ஐயா (தந்தை) இறந்தபின்னர் நடக்கும் சவண்டி கிரியையின்போது அதனைச் செய்யவந்த ஐயரின் காலில் விழுந்து வணங்கமறுக்கும் 'முகமூடி' அணியாத முழுமனிதனாக காட்சி தருகிறார்.

ஒரு படைப்பாளியின் ஆற்றல் வாசகனின் சிந்தனையில் ஊடுறுவுவதில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது. தெணியான் வாசகனிடத்தில் ஊடுருவுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் வாசகனையும் தன்னோடு அழைத்துச்செல்கிறார். தான் பிறந்து, தவழ்ந்து வளர்ந்து நடமாடிய வடமராட்சியை சுற்றிக்காண்பிக்கின்றார். நாமும் அவர் இன்னும் சொல்லாதவற்றை கேட்டறிவதற்காக அவரைப் பின்தொடருகின்றோம்.




**ஒரு படைப்பாளியின் ஆற்றல் வாசகனின் சிந்தனையில் ஊடுறுவுவதில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது. தெணியான் வாசகனிடத்தில் ஊடுறுவுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் வாசகனையும் தன்னோடு அழைத்துச்செல்கிறார். தான் பிறந்து, தவழ்ந்து வளர்ந்து நடமாடிய வடமராட்சியை சுற்றிக்காண்பிக்கின்றார்.**

அம்மாக்களின் உழைப்பு பெரிதாகப் பேசப்படுவதில்லை. வேலை- வேலையே வாழ்க்கை என்று ஒரு சிறுகதை எழுதியிருக்கிறார் கி.ராஜநாராயணன். இங்கே இந்தத்தொடரில் தனது தாயாரின் உழைப்பு பற்றி சிலாகித்து எழுதுகிறார் தெணியான். அம்மாமாருக்கு வீட்டில் கூட்டிப்பெருக்கி சமைப்பது மட்டும் அல்ல வேலை. அதற்கும் அப்பால் அவர்கள் சகிக்கும், சுமக்கும் வேலைகளும் அதிகம்தான்.

ஒரு சண்டியருக்கு பீடி வாங்கிக் கொடுக்கும் வேலையை தெணியான் வெறுப்போடு ஏற்றுக்கொள்கிறார். பீடியை தெணியான் பீடி என்றுதான் குறிப்பிடுகிறார். தனது வெறுப்பை அவர் காண்பிக்கும் விதம் வேடிக்கையானது. வெறுப்புக்கு கழிவுதான் அவருக்கு உதவுகிறது. பீடியில் சிறுநீர் கழித்து விட்டு கொடுக்கிறார்.

எனக்கு கவியரசு கண்ணதாசனுடன் - கமல்ஹாசன் நடித்த மகாநதி திரைப்படமும் நினைவுக்கு வருகிறது.

"நீ உருப்படமாட்டாய்" என்று சொன்ன பாடசாலை ஆசிரியர் மீதிருந்த வெறுப்பை பிறிதொரு காலத்தில் அந்த பாடசாலைக் கட்டிடத்தில் சிறுநீர் பெய்து காட்டிக்கொண்டார் கண்ணதாசன்.

மகாநதி திரைப்படத்தில் சிறையிலிருக்கும் கமலுக்கு காதலியிடமிருந்து வரும் கடிதத்தின்மீது சிறுநீர்கழித்து தனது வெறுப்பை ஒரு சிறைக்காவலன் காண்பிக்கின்றான். வெறுப்புக்கு சிறுநீர்தான் பதிலடியோ? என்று எண்ணத் தோன்றியது.

இந்த நூல் தமிழ்நாட்டில் வெளியாகியிருக்கிறது. பிரதேச மொழிவழக்குகள் நிரம்பிய இந்த நூலை தமிழக வாசகர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எமது மொழிவழக்குகள் தங்களுக்கு புரியவில்லை என்று இப்பொழுதும் சொல்லிக்கொண்டிருக்கும் தமிழக படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் இந்நூல் மற்றுமொரு வரவு.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்





**34)** பித்தளை மேசைக் கரண்டியில் சிறிதளவு நீரை இட்டு மெழுகுவர்த்திச் சுவாலையில் பிடிக்கும் போது
1) நீர் ஆவியாகும். 2) நீர் நிறம் மாறும்.
3) மெழுகுதிரி அணைந்துவிடும். 4) ஒரு மாற்றமும் நிகழாது.

**35)** கங்குன், பசளி, பொன்னாங்கண்ணி போன்ற இலைக்கறி வகைகளில் அதிகமாகக் காணப்படும் போசணை
1) விற்றமின் A 2) விற்றமின் C 3) இரும்புச்சத்து 4) புரதச்சத்து

**36)** 
இக் குறியீட்டினால் கருதப்படுவது
1) கவனமாகக் கையாளுங்கள்.
2) உடைந்த பொருள்கள்
3) நொறுங்கக் கூடியது.
4) கண்ணாடிப் பொருள்கள்




**37)** இரவில் மலரும் பூ அல்லாதது
1) அல்லி 2) அந்திமந்தாரை 3) கடுபுல் 4) பவளமல்லிகை

**38)** ஒலிம்பிக் கொடியின் பின்னணி நிறம் யாது?
1) சிவப்பு 2) இளமஞ்சள் 3) இளஞ்சிவப்பு 4) வெள்ளை

**39)** கைக்குட்டையில் மலர்க் காம்பினைத் தைப்பதற்கு பயன்படுத்தும் தையல்முறை
1)  2)  3)  4) 

**40)** மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் "மனவுறுதி" எத்தனையாவது படிமுறை?
1) இரண்டாவது 2) ஐந்தாவது 3) முதலாவது 4) மூன்றாவது

**41)** அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கும் போது சேர்க்கக் கூடாத உணவுப்பொருள்கள்
1) அயடீன் கலந்த உப்பு, வினாகிரி 2) வினாகிரி, புளி
3) புளி, கறிமிளகாய் 4) வினாகிரி, வெந்தயம்

**42)** விருச்சிக இராசியைக் குறிக்கும் உரு
1)  2)  3)  4) 

**43)** கொத்தாக மலரும் பூக்களின் கூட்டமாக அமையாதது
1) சூரியகாந்தி, செவ்வந்தி 2) செவ்வரத்தை, றோசா
3) செவ்வந்தி, சீதேவியார் செங்கழுநீர் 4) சீதேவியார் செங்கழுநீர், தொட்டாற்சுருங்கி





**44)** 
இவ்வோவியம் காணப்படும் குன்று அமைந்துள்ள மாகாணம், மாவட்டம் முறையே,
1) வடமத்திய மாகாணம், அநுராதபுரம்
2) மத்திய மாகாணம், மாத்தளை
3) வடமேல் மாகாணம், குருநாகல்
4) வடமத்திய மாகாணம், பொலன்னறுவை



**45)** செந்நிறக்கோள் என அழைக்கப்படுவது
1) செவ்வாய் 2) புதன் 3) வெள்ளி 4) வியாழன்

**46)** கலாவாவியைக் கட்டுவித்த மன்னன்
1) மகாசேனன் 2) தாதுசேனன் 3) பராக்கிரமபாகு 4) பண்டுகாபயன்

**47)** 
இவ்வுரு உணர்த்தும் கருத்து யாது?
1) மின் விநியோகிக்கும் இடம். 2) மின்நிலையம்
3) இலங்கை மின்சார சபை 4) அணுமின் நிலையம்

**48)** சிவப்பு நிறத்தையும், மஞ்சள் நிறத்தையும் சம அளவில் கலக்கும் போது பெறப்படும் நிறம்
1) இளஞ்சிவப்பு 2) இளம்மஞ்சள் 3) செம்மஞ்சள் 4) கரும் மஞ்சள்

**49)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் கட்டத்தைக் காட்டும் உரு
1)  2)  3)  4) 

**50)**  
ஆகிய இரு குறியீடுகளும் பொதியில் காணப்படும் உணவுப் பொருள்
1) விசுக்கோத்து 2) குளுக்கோசு
3) குளிர்பானம் 4) அயடீன் கலந்த உப்பு

### விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 33. | 1 | 34. | 1 |
| 35. | 3 | 36. | 3 | 37. | 2 | 38. | 4 | 39. | 2 |
| 40. | 4 | 41. | 2 | 42. | 3 | 43. | 2 | 44. | 2 |
| 45. | 1 | 46. | 2 | 47. | 3 | 48. | 3 | 49. | 3 |
| 50. | 4 | | | | | | | | |

### CHANNEL-1

**06.01.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### CHANNEL - 2

**06.01.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## 12-15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வெள்ளி முதல் கொரோனா தடுப்பூசி

கொழும்பு, ஜன. 06

12 - 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முதல் மேற்படி வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாகாண வைத்தியசாலைகள் இனிமேல் மத்திய அரசின் கீழ்?

கொழும்பு, ஜன. 06

மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவருவது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாளாந்தம் வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை, வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதார பணியாளர்களை கருத்திற்கொண்டு மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

எனினும் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைக்கு சொந்தமாக உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட நிறுவனங்களை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரும் விடயத்தில் உள்ள சிக்கல்கள் குறித்து கவனத்தில் கொள்ளவேண்டுமெனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது உள்ள சுகாதார அமைப்பை வலுப்படுத்த வேண்டும். நாட்டின் எதிர் காலத்துக்கு இது சாதகமாக அமையும் எனவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, அபிவிருத்தி என்ற போர்வையில் ஏற்கனவே வடக்கு, கிழக்கில் மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளை கையேற்க மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்குக் கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன.

இது 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில அற்ப-சொற்ப அதிகாரங்களையும் தட்டிப் பறிக்கும் முயற்சி என வடக்கு, கிழக்கில் இருந்து கண்டன குரல்கள் எழுந்தன. (அ)

## கோதுமை மாவை கொடுத்து கொச்சைப்படுத்திவிட்டனர்

### இராதாகிருஷ்ணன் எம். பி சாடல்



கொழும்பு, ஜன.6

கோதுமை மாவை கொடுத்து மலையக மக்களை அரசாங்கம் கொச்சைப்படுத்திவிட்டது என்று, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசாங்கம் என்ன செய்கின்றது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசாங்கத்துக்கு சுமையாக இருப்பவர்கள் இந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் என கூறியவரே அவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் பெற்றுக்கொடுப்பதாக கூறுகின்றார்.

அரசாங்க உத்தியோகத்தர்களை இந்த நாட்டு மக்கள் மத்தியில் அவமானப்படுத்திவிட்டு இன்று அவர்களை சமாளிப்பதற்காக பணத்தை அச்சடித்து மேலதிக கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாய் வழங்குவது எந்தவிதத்தில் நியாயமானது என்பது புரியவில்லை. பணத்தை வைத்துக்கொண்டு எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என இந்த அரசாங்கம் கருதுகின்றதா?

எங்களுடைய பெருந்தோட்டத் தொழிலாளர்கள், கொரோனா ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்து வருகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு இந்த அரசாங்கம் எதனையும் செய்யவில்லை.

ஆயிரம் ரூபாய் நாள் சம்பளம் பெற்றுத்தருவதாகக் கூறி அவர்களை ஏமாற்றியிருக்கின்றது. இன்று பெருந்தோட்ட கம்பனிகள் ஆயிரம் ரூபாயை வழங்க மறுத்து வருகின்றன. அதற்காக அவர்கள் பல நிபந்தனைகளை கூறிவருகின்றனர். அதனை தட்டிக் கேட்க முடியாமல் இருக்கின்றது இந்த அரசாங்கம்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வெறுமனே ஒரு நாளைக்கு 500 கிராம் கோதுமை மாவை குறைந்த விலைக்கு கொடுப்பதை விட்டுவிட்டு பொருட்களின் விலைகளை குறைத்து அதனை தட்டுப்பாடு இல்லாமல் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் - என்றுள்ளது. (கே)

## 11 ஆயிரம் பேர் பொலிஸாரால் சோதனை

கொழும்பு, ஜன. 06

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் மட்டும் 11 ஆயிரத்து 42 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் செயல்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், நேற்று முன்தினம் 1,102 பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது 4,426 மோட்டார் சைக்கிள்களும் 3,733 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன் 11 ஆயிரத்து 42 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 2 ஆயிரத்து 322 பேர் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனர். (கே)

## சிலைகள் உடைக்கப்பட்டாலும் திட்டமிட்டபடி கும்பாபிஷேகம்!

### அக்கரபத்தனை ஆலய நிர்வாகம்

நுவரெலியா, ஜன. 06

நுவரெலியா - அக்கரபத்தனை சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம் திட்டமிட்டப்படி நடைபெறும் என்று ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

அக்கரப்பத்தனை நகரில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த சித்தி விநாயகர் ஆலயம் வந்த நிலையில், எதிர்வரும் 23ஆம் திகதி கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடுகள் இடம்பெற்றன. இந்நிலையில், கடந்த 2ஆம் திகதி சில விஷமிகளால் ஆலயத்தின் சிலைகள், விக்கிரகங்கள் என்பன அடித்து உடைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பொலிஸ் விசாரணை இடம்பெற்று வரு கின்றது.

இந்நிலையில், ஆலய கும்பாபிஷேகம் திட்டமிட்ட தினத்தில் நடைபெறும் என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், ஆலயத்தின் செயலாளர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில்,

இந்தச் சம்பவத்தின் மூலமாக ஆலயத்தில் நடைபெற இருந்த கும்பாபிஷேக நிகழ்வை தடுத்து நிறுத்த முடியும் என யாரும் நினைத்திருந்தால் அது அவர்களின் அறியாமையாகும். திட்டமிட்டபடி எதிர்வரும் 19ஆம் திகதி பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டு 23ஆம் திகதி கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு ஆலய நிர்வாக சபை தீர்மானித்திருக்கின்றது.

இதன்படி தற்போது வேலைகள் துரிதமாக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட அனைத்து சிற்பங்களையும் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (கே)

## 220,000 பேர் நாட்டை விட்டு கடந்த ஆண்டு வெளியேறினர்!

### கவிந்த எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஜன. 06

கடந்த ஆண்டு 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அரச இயந்திரம் சீர்குலைந்துள்ளது. இந்த ஆண்டின் இறுதிக்குள் இந்த நாட்டில் யார் மிஞ்சப் போகின்றார்கள் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று, பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட நாளில் இருந்து ஒவ்வொரு வருடமும் ஒரு இலட்சம் மக்கள் இந்த நாட்டிலிருந்து துரத்தப்படுவதால் நாட்டு மக்கள் இந்த நாட்டில் வாழும் தகுதியை இழக்கிறார்கள் என்பதை நாம் கற்பனை செய்யலாம்.

அரச இயந்திரம் சீர்குலைந்துள்ளது. சட்டம், ஒழுங்கு நிலை குறித்து மக்களுக்கு சந்தேகம். நாட்டைவிட்டு வெளியேறுவதை தவிர நாட்டு மக்களுக்கு வேறு வழியில்லை. அதேபோன்று 2022ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டில் எஞ்சியிருப்பவர்கள் யார் என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

தற்போது இந்த நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது, பணவீக்கத்தால் அனைத்துப் பொருட்களின் விலையும் மும்மடங்கு உயர்ந்துள்ளதுள்ளது. நித்திரையில் இருந்து எழுந்தவர் போன்று நிதி அமைச்சர் அமெரிக்காவில் இருந்து வந்து 5 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக கூறினார். பொருளாதார பிரச்னையை வெறும் 5 ஆயிரம் ரூபாயால் தீர்க்க முடியுமா?

நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் விவசாயிகள் இன்று பட்டினியால் வாடுகின்றனர். இன்றைய உணவுப் பற்றாக்குறைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். எதுவாக இருந்தாலும் 2024ஆம் ஆண்டு நாட்டின் பொறுப்பை ஏற்கக் கூடிய ஒரே தலைவர் சஜித் பிரேமதாஸதான். எந்தக் கூட்டணி அமைத்தாலும் எந்த அரசியல் முடிவுகள் எடுத்தாலும், சஜித் பிரேமதாஸவே வெற்றி பெறுவார் -என்றும் அவர் கூறினார். (கே)

## மலையக மக்களின் பிரச்னைகளை கோதுமை மாவுக்குள் அடக்காதீர்கள்!

### திலகராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

மலையக மக்களின் பிரச்னைகளை கோதுமை மாவுக்குள்ளேயே மட்டுப்படுத்தும் அரசாங்கங்களின் போக்கு மாற வேண்டும் என்று, நுவரெலிய மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு சலுகை விலையில் கோதுமை மாவை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மலையகப் பெருந்தோட்ட மக்களின் பொருளாதார நிலை குறித்து அரசாங்கம் உண்மையாக அக்கறை கொள்ளுமாக இருந்தால், வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நாளொன்றுக்கான ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளத்தையே உறுதிசெய்ய வேண்டும்.

ஜனவரி முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் கோதுமை மாவை விற்பனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். காலங்காலமாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் மலையகப் பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளை கோதுமை மாவுடனேயே புரிந்து கொள்கின்றமை மன வருத்தத்துக்கு உரியது.

இந்த அரசாங்கம் தனது சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தில் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளத்தை நாளாந்தம் பெற்றுக்கொடுக்க உறுதி அளித்தது. நீண்ட இழுபறிக்குப் பின்னர் அரச வர்த்தமானி மூலம் அதனை பிரகடனம் செய்தாலும் ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளம் நாளாந்தம் கிடைப்பதை அரசாங்கம் இதுவரை உறுதி செய்யவில்லை.

இதனால் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மீறப்படுகின்றன. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழில்சங்க தலைவர்களோ அரசாங்க வர்த்தமானியை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு மாறாக, மீண்டும் கூட்டுஒப்பந்தம் எனும் அடிமை சாசனத்தைக் கொண்டுவரவே துடிக்கின்றனர்.

இந்நிலையில், ஆயிரம் ரூபாய் நாள் சம்பளம் உரிய வகையில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உள்ளது - என்றார். (கே)

# புதிய ஆண்டில் முதல் ஏவுகணை சோதனை!

## அதிரடியை ஆரம்பித்தது வட கொரியா

பியொங்யாங், ஜன. 06

ஏவுகணை என நம்பப்படும் ஆயுத சோதனையை வட கொரியா நேற்று முன்தினம் நடத்தியுள்ளதாக தென் கொரியாவின் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.



இது ஒரு பாலிஸ்டிக் ஏவுகணையாக இருக்கலாம் என தென் கொரியா கூறியுள்ளது. எனினும் இது இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை.

வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனைகள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைகளுக்கு ஐ. நா. தடை விதித்துள்ளது.

இந்நிலையில் வடகொரியாவின் ஏவுகணை சோதனை உறுதிப்படுத் தப்பட்டால் அந்த நாடு முன்னெடுத்த முதல் புதிய ஆயுத சோதனையாக இது அமையும்.

வட கொரியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆயுத சோதனை குறித்து தென் கொரியா மற்றும் அமெரிக்க உளவுத்துறை இணைந்து கூட்டாக ஆராய்ந்து வருவதாக தென் கொரியாவின் கூட்டுப்படைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரிய தீபகற்பத்தில் அதிகரித்து வரும் ஸ்திரமற்ற நிலை காரணமாக வட கொரியா தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும் என கடந்த வாரம் இடம்பெற்ற ஆண்டிறுதி நிகழ்வில் அந்த நாட்டுத் தலைவர் கிம் ஜோங் உன் கருத்து வெளியிட்ட சில நாட்களின் பின்னர் புதிய ஆயுத சோதனை இடம்பெற்றுள்ளது.

வட கொரியா 2022 இல் பொருளாதாரம் மற்றும் உணவு உற்பத்தி குறித்தும் அதிக கவனம் செலுத்தும் எனவும் தனது ஆண்டிறுதி உரையில் கிம் ஜோங் உன் குறிப்பிட்டார்.

இதேவேளை, வட கொரியாவின் புதிய ஆயுத சோதனை மிகவும் கவலைக்குரியது என ஜப்பான் பிரதமர் பூமியோ கிஷிடா தெரிவித்தார். 2021 முதல் வட கொரியா மீண்டும் மீண்டும் ஏவுகணை சோதனைகளை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2021 ஆம் ஆண்டில் வட கொரியா புதிய ஹைபர்சொனிக் ஏவுகணை பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் நீண்ட தூர கப்பல் ஏவுகணை சோதனைகளை நடத்தியதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஏனைய ஏவுகணைகளை விட பாலிஸ்டிக் ஏவுகணைகள் மிகவும் அச்சுறுத்தலானவையாகக் கருதப்படுகின்றன. ஏனெனில் அவை அதிக எடையைச் சுமந்தவாறு அதி வேகத்தில் சென்று நீண்ட தூரத்தில் உள்ள இலக்குகளை துல்லியமாகத் தாக்க வல்லவையாகும்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தனது எல்லைகளை இரண்டு வருடங்களாக வட கொரியா மூடியுள்ள நிலையில் அந்நாடு பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. எனினும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஆயுத சோதனைகளை அந்நாடு தீவிரப்படுத்தியுள்ளது. ஆண்டு இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் நாடு பெரும் வாழ்வா சாவா போராட்டத்தை எதிர்கொள்கிறது என்று கூறிய வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன், பொருளாதாரத்தை வலுவாக்குவதும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் இந்த ஆண்டின் இலக்குகளாக இருப்பதாகக் கூறினார். (அ)




# கடும் நெருக்கடியில் சிக்கிய இங்கிலாந்து!

## செவ்வாயன்று மட்டும் 218,724 பேருக்கு கொரோனா தொற்று, 48 பேர் மரணம்!

லண்டன், ஜன. 06

இங்கிலாந்தில் கோவிட் தொற்று நோய் தொடங்கியதில் இருந்து முன்னொருபோதும் இல்லாதவாறு மிக அதிகளவு தொற்று நோயாளர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உறுதிப்படுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் நாட்டில் 218,724 கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் உறுதிப் படுத்தப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொற்று நோய் தொடங்கியதில் இருந்து ஒரு நாள் தொற்று நோயாளர் தொகை 2 இலட்சத்தைக் கடந்தது் இதுவே முதன்முறையாகும்.

இதன் மூலம் நாட்டில் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் எண்ணிக்கை ஒரு கோடியே 36 இலட்சத்து 41 ஆயிரத்து 520 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மேலும் 48 பேர் உயிரிழந்த நிலையில் மொத்த கொரோனா மரணங்களும் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 941 ஆக உயர்ந்துள்ள.

நிலைமை இவ்வாறு இருக்கையில் நாட்டில் கட்டுப்பாடுகள் மேலும் கடுமையாக்கும் உடனடித் திட்டங்கள் எதுவும் இல்லை என இங்கிலாந்து சுகாதாரச் செயலாளர் சஜித் ஜாவித் தெரிவித்தார்.

அமெரிக்கா செய்ததைப் போல தனிமைப்படுத்தல் காலத்தை ஏழு நாட்களில் இருந்து ஐந்து நாட்களாக குறைக்கும் திட்டமும் தமது அரசிடம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனவரி அனைவருக்கும் கடினமான மாதமாக இருக்கும் என்பதை நாங்கள் எப்போதோ அறிந்திருந்தோம். அடுத்த சில வாரங்களில் நிலைமை தற்போதுள்ளதை விட மோசமாகும் என உத்தேச கணிப்பீடுகள் காட்டுவதாக இங்கிலாந்து பொதுச் சுகாதார சேவை தலைமை நிர்வாகி கெவின் மெக்னா மரா தெரிவித்தார். இதற்கிடையில் தற்போதைய நிலை குறித்து கருத்து வெளியிட்ட இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன், மிகத் தீவிரமாகப் பரவக் கூடிய ஒமைக்ரோன் அலைக்கு மத்தியில் வரும் வாரங்களில் சுகாதார சேவைகள் கடும் அழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடும் என அச்சம் வெளியிட்டார். (அ)

## 24 இந்திய மாநிலங்களில் பரவியது ஒமைக்ரோன்!

புதுடில்லி, ஜன. 06

இந்தியாவின் 24 மாநிலங்களில் ஒமைக்ரோன் பரவியுள்ள நிலையில் நேற்று முன்தினம் 153 ஒமைக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வரையான நிலவரத்தின் அடிப்படையில் இந்தியா முழுவதும் 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒமைக்ரான் வைரஸ் பரவியுள்ளது.



## ஒமைக்ரோனை விட ஆபத்தான ஐ.எச்.யு. உருத்திரிபு பிரான்ஸில்!

பாரிஸ், ஜன. 06

ஒமைக்ரோனை விட மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கலாம் எனக் கருதப்படும் புதிய கொரோனா உருத்திரிபு பிரான்ஸில் கண்டறியப்பட்டுள்ளதாக பிரான்ஸின் ஐ.எச்.யு. மெடிட்டரேன் தொற்று நோய் ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பி.1.640.2 என வகைப்படுத்தப்பட்டுள்ள புதிய உருத்திரிபு வைரஸுக்கு ஐ.எச்.யு. என அதனைக் கண்டறிந்த ஆய்வகம் தற்காலிகமாக பெயரிட்டுள்ளது.

12 கொரோனா நோயாளிகளின் உடலில் முற்றிலும் புதிய வகை கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதைக் மெடிட்டரேன் தொற்று நோய் ஆய்வக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஒமைக்ரோனை விட இது 46 இக்கும் மேற்பட்ட பிறழ்வுகளை கொண்டுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம், இது ஒமைக்ரோன் உருத்திரிபு கொரோனாவை விட மனிதர்களின் உடலில் மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

கொரோனா வைரஸ் தன்னை எப்படி உருமாற்றம் செய்து கொள்ளும் என்பதை யாராலும் கணிக்க முடியாது என்பதை புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஐ.எச். யு. வகை திரிபு உணர்த்துகிறது என இதுகுறித்து இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# கனடிய விமானத்தில் கோவிட் விதிகள் மீறல்!

## உடனடி விசாரணைக்கு உத்தரவு

மொன்றியல், ஜன. 06

கனடாவில் கோவிட் தொற்று நோய் தீவிரமடைந்து வரும் நிலையில் சன்விங் எயார்லைன்ஸ் விமானத்தில் முகக்கவசம் இன்றி கொண்டாட்டங்களில் ஈடுபட்டவர்கள் குறித்த புகைப்படங்கள், செய்திகள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முகக்கவசம் அணியாது இவ்வாறு கோவிட் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிச் செயற்பட்டவர்கள் குறித்த விசாரணைக்கு கனடா போக்குவரத்து அமைச்சர் ஒமர் அல் காப்ரா உத்தரவிட்டுள்ளார்.

டிசெம்பர் 30 ஆம் திகதி மொன்றியலில் இருந்து ரொரன்டோ வந்த விமானத்தில் பயணிகள் முகக்கவசம் அணியாது செல்பி எடுப்பது, மது அருந்துவது மற்றும் ஒன்றாகக் கூடுவது போன்ற புகைப்படங்களுடன் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ள நிலையியேயே அமைச்சர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.


சன்விங் விமானத்தில் இடம்பெற்ற ஏற்றுக்கொள்ள முடியாத பயணிகளின் நடத்தை குறித்து நான் அறிந்துள்ளேன் என அல்காப்ரா கூறினார்.

பயணிகளின் இவ்வாறான நடத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது. இது எங்கள் விமானப் பணிக் குழுவினரை பெரும் ஆபத்தில் ஆழ்த்துகிறது என சன்விங் விமானப் பணிப்பெண்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கனடிய பொது ஊழியர் சங்கத்தின் உள்ளூர் தலைவர் ரெனா கிஸ்பால்வி தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நடத்தைகள் இனியும் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவது மத்திய அரசு மற்றும் விமான நிறுவனங்களின் பொறுப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொற்று நோய் நெருக்கடி தீவிரமடைந்து வரும் நிலையில் கனடாவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணங்கள் ஜனவரி 17 ஆம் திகதி வரை பாடசாலைகளை மூடியுள்ளன.

அத்துடன், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கியூபெக் மாகாணத்தில் உணவகங்களில் அமர்ந்து உணவருந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)



ஈழநாடு






# ஓய்வு பெறுகிறார் பானுக ராஜபக்ஷ!

கொழும்பு, ஜன. 06

இலங்கை கிரிக்கெட் அணியின் பானுக ராஜபக்ஷ, சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விலகுகிறார் என்று அவர் கூறியுள்ளார்.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபைக்கு பானுக ராஜபக்ஷ கையளித்துள்ள ஓய்வு தொடர்பான கடிதத்தில்,

ஒரு விளையாட்டு வீரராகவும், கணவராகவும் இந்த முடிவை எடுத்தேன். குடும்பத்தின் பொறுப்புகளை நிறைவேற்றும் நம்பிக்கையில் நான் இந்த முடிவை எடுத்தேன். இலங்கை கிரிக்கெட்டின் எதிர்கால முயற்சிகள் வெற்றியடைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பானுக ராஜபக்ஷ இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 5 ஒருநாள் மற்றும் 18 இருபது-20 போட்டிகளில் விளையாடி முறையே 89 மற்றும் 320 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இறுதியாக லங்கா பிறீமியர் லீக் போட்டியில் காலி கிளடியேட்டர்ஸ் அணிக்கு தலைமை தாங்கி, இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன் அணியை வீழ்த்தி பங்களாதேஷ் சாதனை!



மவுன்கவுனி, ஜன. 06

உலக டெஸ்ட் சம்பியன் அணியான நியூசிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி சாதனை வெற்றியை பதிவு செய்தது பங்களாதேஷ் அணி.

நியூசிலாந்துக்கு சென்றுள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில் முதல் போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் 328 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 258 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்தபோதும் நடுவரிசை வீரர்களின் போராட்டத்தால் 458 ஓட்டங்களை குவித்தது அந்த அணி.

130 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 147 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறிய நிலையில் நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

நேற்று இறுதிநாள் ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணியின் விக்கெட்களை பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள் வேகமாக வீழ்த்தினர். நேற்றைய நாளில் வெறும் 10 ஓவர்களே நியூசிலாந்தின் வீரர்கள் தாக்குப்பிடித்தனர்.

37 ஓட்டங்களுடன் ரோஸ் ரெய்லரும், ரச்சின் ரவீந்திர 6 ஓட்டங்களுடனும் நேற்றை நாளை ஆரம்பித்தனர். மேலதிகமாக 3 ஓட்டங்களைப் பெற்ற ரெய்லர் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கைல் ஜமைசன், ரிம் சௌதி ஆகியோர் ஓட்டம் எடுக்காமல் ஆட்டமிழக்கவே நியூசிலாந்து முற்றாக நிலைகுலைந்தது. ரவீந்திர 165, ட்ரெண்ட் போல்ட் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 73.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது நியூசிலாந்து அணி.

பங்களாதேஷின் பந்துவீச்சில் எபடொட் ஹூசைன் 6 விக்கெட்களையும், தஸ்கின் அஹமட் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

40 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 16.5 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 42 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

21 ஆண்டுகால டெஸ்ட் வரலாற்றில் நியூசிலாந்து அணிக்கு எதிராக பங்களாதேஷ் பெற்ற முதல் வெற்றி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தென்னாபிரிக்கா போராட்டம்!

ஜோகன்னர்ஸ்பேர்க், ஜன. 06

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி போராட்ட குணத்தை வெளிப்படுத்தி வருகின்றது. இதனால், இந்திய அணி 188 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இரண்டாவது போட்டி தற்போது ஜோகன்னர்ஸ்பேர்க்கில் நடக்கிறது.

முதல் இனிங்ஸில் 202 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இந்திய அணி.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 229 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. வெறுமனே 27 ஓட்டங்களாலேயே அந்த அணியால் முன்னிலை பெற முடிந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சில் தாகூர் 7 விக்கெட்களையும், முஹமட் ஷமி 2 விக்கெட்களையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் துடுப்பாட்டம் தடுமாறியது.

கே. எல். ராகுல் 8 ஓட்டங்கள், மயங் அகர்வால் 23 ஓட்டங்கள் என ஆரம்ப வீரர்கள் வேகமாக வீழ்த்தப்பட்டனர். ஆனால், மூன்றாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய புஜாராவும் ரஹானேயும் நிதானமாக ஆடினர்.

அண்மைக்காலமாக அவர்கள் மீதான விமர்சனங்களை போக்கடிக்கும் விதத்தில் ஆடிய இருவரும் அரைச்சதம் கடந்தனர். புஜாரா 53, ரஹானே 58 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழக்கவே அடுத்து வந்த ரிஷப் பந்த் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், அஸ்வின் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

நேற்று மதிய போசனத்துக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. விகாரி 6, தாகூர் 4 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்த னர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபாடா 3 விக்கெட்களையும், ஒலிவர், நிகிடி, ஜான்சன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)




## ஆஷஷ் டெஸ்ட் தொடர்:

# நான்காவது போட்டியில் ஆஸி. அணி தடுமாற்றம்!

சிட்னி, ஜன. 06

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஷ் தொடரின் நான்காவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பவரிசை தடுமாற்றம் கண்டுள்ளது.

நேற்றைய முதல்நாள் ஆட்டம் முடிவில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 126 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மழையின் குறுக்கீடு காரணமாக முதல்நாளில் 46.5 ஓவர்களே வீசப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் ஆஷஷ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. ஐந்து போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் முதல் மூன்று போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வென்று தொடரைக் கைப்பற்றிவிட்ட நிலையில், நான்காவது போட்டி நேற்று சிட்னியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. வழக்கம் போன்று டேவிட் வோர்ணர், மார்கஸ் ஹரிஸ் இணை தொடக்கம் கொடுத்தது.

நிதானமாக போட்டியை ஆரம்பித்த அவர்கள் 51 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற நிலையில் முதல் விக்கெட்டாக வோர்ணர் 30 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். அவரைத் தொடர்ந்து லபுசாக்னே களம் புகுந்தார். இந்த நிலையில், 38 ஓட்டங்களைப் பெற்ற ஹரிஸ் அண்டர்சனின் பந்தில் ரூட்டிடம் பிடி




கொடுத்து ஆட்ட மிழந்தார். லபுசாக்னேயும் 28 ஓட்டங்களில் ஆட்டமிழக்க ஆஸி. அணியின் ஆரம்பம் தடுமாறியது.

46.5 ஓவர்களில் மழை மீண்டும் குறுக்கிட ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. அப்போது அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஸ்ரீவன் ஸ்மித் 6, உஸ்மன் கவாஜா 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். எனினும், தொடர்ந்து பெய்த மழையால் ஆட்டத்தை நேற்று ஆரம்பிக்க முடியவில்லை. இங்கிலாந்தின் பந்துவீச்சில் அண்டர்சன், பிரோட், மார்க் வூட் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். (ஐ)





# தலதா மாளிகையில் ஜனாதிபதி வழிபாடு!

கொழும்பு, ஜன. 06

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் நேற்று முற்பகல் மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதியை தியவதன நிலமே நிலங்க தேல வரவேற்றார்.

தலதா மாளிகைக்கு வழிபாட்டுக்காக வருகை தந்திருந்த பொதுமக்களும் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பளித்தனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்போது அந்த மக்களு டன் சுமூகமாகக் கலந்துரை யாடிய ஜனாதிபதி, அவர்களின் நலன் விசாரித்தறிந்து கொண்டார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மற்றும் புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோரும் ஜனாதிபதியுடன் தலாதா மாளிகை வழிபாட்டில் பங்கேற்றனர்.(அ)

# தவறான வழியில் பயணித்தால் அரசுக்கு சு.க. ஆதரவு வழங்காது

## தயாசிறி ஜயசேகர திட்டவட்ட அறிவிப்பு



**கொழும்பு, ஜன. 06**

**"அரசு தவறான வழியில் பயணிக்குமானால் அதற்கான ஆதரவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒருபோதும் வழங்காது." - என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் காரணம். ஜனாதிபதித் தேர்தலின்போது எமது 15 லட்சம் வாக்குகள்தான் தீர்க்கமானதாக மாறியது. அன்று மொட்டு கட்சியுடன் வர சொன்ன மக்கள், இன்று மீண்டும் அந்த கட்சியுடன் வேண்டாம் என சொல்கின்றனர். நாம் மக்கள் பக்கம் நின்றே முடிவெடுக்கவேண்டும். இந்த அரசை விமர்சிக்கும் உரிமை எமக்கும் இருக்கின்றது.

வெளியேறும் காலப்பகுதியை எமது கட்சியின் மத்திய குழு தீர்மானித்தால் நாம் வெளியேறுவோம். அதுவரை அரசியல் இருப்போம். அரசை தவறான வழியில் செல்ல இடமளிக்க மாட்டோம். அவ்வாறு சென்றால அதற்கு எமது ஆதரவு இருக்காது-என்றார். (அ)

## சோள இறக்குமதி இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜன. 06

டொலர் பற்றாக்குறை காரணமாக தேசிய மிருகவள அபிவிருத்திச் சபையினால் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு அவசியமான 1,500 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சோளத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக குறித்த 1,500 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்ததாக அந்த சபையின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள சுமித் கமகே தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும், டொலர் பற்றாக்குறை காரணமாக குறித்த சோளத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், சோள இறக்குமதி தாமதமடைந்துள்ளமை காரணமாக, அற்குப் பதிலாக பயிர்ச்செய்கை யாளர்களிடமிருந்து சோளப் பயிரைக் கொள்வனவு செய்து கால்நடைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மிருகவள அபிவிருத்தி சபையின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள சுமத் கமகே தெரிவித்தார்.

# பணம் அச்சிடுவதால் மட்டும் பிரச்னை தீரப்போவதில்லை

## சுட்டிக்காட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 06

"பணத்தை அச்சிட்டு 5 ஆயிரம் ரூபா வழங்குவதன்மூலம் பிரச்னைகள் தீரப்போவதில்லை. அது பொருளாதார நெருக்கடியை மேலும் வலுப்படுத்தும்." - என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. பச்சை மிளகாயின்விலைகூட ஆயிரம் ரூபாவை தாண்டியுள்ளது. இந்நிலையில் 5 ஆயிரம் ரூபாவை வைத்து என்ன செய்வது? காசு இருந்தாலும் சமையல் எரிவாயு வாங்க முடியுமா?

டிசெம்பர் 29 ஆம் திகதி இந்த அரசு பணம் அச்சிட்டது. அதனைதான் பகிர்ந்துவருகின்றது. மக்களுக்கு வருமானம் இல்லை, நாட்டில் உற்பத்தி இல்லை. இவற்றுக்கு உரிய தீர்வை தேடாமல் பணத்தை அச்சிட்டு வழங்குவதில் பயனில்லை-என்றார்.

"அதேவேளை, பணத்தை அச்சிட்டே அதனை நாட்டு மக்களுக்கு அரசு வழங்குகின்றது. அரசியல் தீர்மானம் பொருளாதாரத்துக்கு தீர்வு அல்ல. " - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (அ)

# சந்தையில் அரிசி விலை சடுதியாக அதிகரித்தது

கொழும்பு, ஜன. 06

சந்தையில் அரிசி விலை மீண்டும் சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன்படி, நாட்டரிசி ஒரு கிலோகிராம் 170 ரூபாய் வரையிலும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 190 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளதாக ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எதிர்காலத்தில் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அந்த சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வழமையாக ஜனவரி மாதத்தில், குறித்த ஆண்டுக்கான பெரும்போக அரிசி சந்தைக்கு கிடைக்கும்.

ஆனால், உரப் பிரச்னை காரணமாக இந்த முறை போதியளவான அரிசி சந்தைக்கு கிடைக்கப் பெறவில்லை என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா கூறினார். (அ)

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**





**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கன்னன் பொதுவாழ்தாஸ்**

ஜாதம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

**இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை**
**அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)**
**075 217 1943**

**மணமகன் தேவை**

யாழ்.இந்து வேளாளர் 1992 பூரம் சிங்கராசி 7இல் செவ்வாய், கிரகபாவம் 24½ உயரம் 5'3" (சைவபோசனம்) Dip. in. Eng College of Education)

B.A. மாணவி ஆங்கில ஆசிரியை வேளாளர் 1993 ரேவதி, மீனம் ராசி, 1இல் செவ்வாய், கிரகபாவம் 46¾ உயரம் 5'4" B.Sc. (Hons) அபிவிருத்தி உத்தியோகத்தர் மணப்பெண்களுக்கு தகுந்த மணமகன் தேவை.

**சிவாலயா சர்வதேச திருமண நிலையம்**
(அனைத்து இனத்தவர்களுக்கான திருமண சேவை)
82/3, மில் ஒழுங்கை, மல்லாகம், யாழ்ப்பாணம்
**077 969 4009, 076 652 8901**

## ஒற்றையாட்சியை...

சியே 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் திட்டம்" என்று சாடியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ. கஜேந்திரன் எம். பி.

அத்துடன், "விடுதலைப் போராட்ட காலத்தை விட நாம் தற்போது பலமாக இருக்கிறோம்.", என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22ஆவது நினைவேந்தல் பொதுக் கூட்டம் நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு,

இந்த மாத இறுதியில் கோட்டாபய அரசாங்கம் ஓர் அரசமைப்பு வரைவை சமர்ப்பிக்கவுள்ளனர். அந்த அரசமைப்பு வருகின்றபோது நீங்கள் 13ஐ தொடக்கப் புள்ளியாக ஏற்றால் - மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றில் ஆதரித்து வாக்களித்தால் அத்தோடு எம் மக்களின் கதை முடிந்து விடும்.

தமிழர்கள் ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொள்கின்றீர்கள் என்று அர்த்தம். நாட்டின் அரசமைப்பை அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியவாறு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் சர்வதேச நெருக்கடி இலங்கை அரசாங்கத்துக்கு அதிகரித்துள்ளது. ஐ. நா. அமைப்பும் பல்வேறு நாடுகளின் இராஜதந்திரிகளும் இதனை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நேரத்தில் அவர்கள் புதிய அரசமைப்பை கொண்டு வரும்போது நாங்கள் இந்த தீவில் பாதுகாப்பாக வாழ்வதற்கான அரசமைப்பு குறித்து சிந்திக்க வேண்டுமா? அல்லது இந்தியாவின் தேவைக்காக இந்தியாவின் நலன்களை பேணுவதற்காக ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இணைந்து தன்னிச்சையாக கொண்டு வந்த 13ஆவது திருத்த சட்டத்தை தொடக்கப் புள்ளியாக ஏற்று ஒற்றையாட்சிக்குள் விழ போகிறீர்களா?

இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பது தமிழ் மக்களின் நலன்களுக்காக செய்யப்பட்டதல்ல. அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை பிராந்திய நலன்களை உறுதிப்படுத்துவதற்காக - இலங்கையை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் நாணயம் குத்தி வைப்பதற்காக செய்யப்பட்டதுதான் அந்த ஒப்பந்தம்.

நாங்கள் இந்தியாவின் நலன்களுக்கு மாறானவர்கள் அல்ல. அதன் தேசிய பாதுகாப்புக்கு எதிரானவர்கள் அல்ல. உங்கள் நலன்களுக்காக செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் அது உங்கள் நலன்சார்ந்ததாகவே இருக்கட்டும். எங்கள் இருப்புக்காக - எங்கள் தீர்வுக்காக தேச அங்கீகாரத்தை வலியுறுத்தும் நாங்கள் சொல்கின்ற - 1951 ஆம் ஆண்டு தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாநாட்டில் இருந்து வலியுறுத்தப்பட்ட தமிழ்த் தேசம், அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசமைப்பை உருவாக்குவதற்கான அழுத்தத்தை இலங்கைமீது இந்தியா பிரயோகிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## இறுதி முடிவு...

படும், இலங்கை அரச மைப்பில் இடம் பெற்றுள்ள ஒரேயோர் அதிகார பரவலாக்கல் சட்டமாகும். இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த உரிய அறிவுறுத்தல்களை, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரதான தரப்பு என்ற முறையில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கு மாறு கோரி பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ் பேசும் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகள் சார்பில் கடிதம் எழுதப்படுகிறது.

இந்தக் கடிதம் தொடர்பாக, நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "திண்ணை கலந்துரையாடல்" முதல் கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்ட பல்வேறு வரைவுகளின் உள்ளடக்கங்கள் தொடர்பாகவும், அவை தொடர்பில் முன்வைக்கப்பட்ட வாதபிரதிவாதங்கள் தொடர்பாகவும், இன்று (நேற்று) மாலை மெய்நிகர் கலந்துரையாடல் மூலம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைக் குழு ஆலோசித்தது. நாளை (இன்று) அரசியல் குழுவை கூட்டி இது தொடர்பில் இறுதி முடிவை எடுப்பது என தீர்மானித்தது.

நேற்று இடம்பெற்ற மெய்நிகர் கலந்துரையாடலில் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்ளிட்ட தலைமைக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## வடக்கில் பூஸ்டர்...

பெற்றுக்கொள்வதில் வடக்கில் பொது மக்கள் பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்-

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் 14,135 கொரோனா தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து டிசெம்பரில் 1381 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். ஜனவரி 4 வரை 33 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

கொரோனா இறப்புகளை பொறுத்தவரை கடந்த வருடம் செப்ரெம்பரில் 386 இறப்புகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், அவை படிப்படியாக குறைவடைந்து டிசெம்பரில் 41 உயிரிழப்புகள் பதிவானது. இந்த வருடத்தில் இதுவரை 3 கொரோனா இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசியைப் பொறுத்தவரை வட மாகாணத்தில் முதலாவது டோஸ் தடுப்பூசியை 90 வீதமானவர்களும் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை 80 வீதமானவர்களும் பெற்றுள்ள நிலையில் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை 30 வயதுக்கு மேல் 25 வீதமானவர்கள் பெற்றுள்ளனர்.

இரண்டாவது தடுப்பூசியை பெற்று மூன்று மாதத்தின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் வடக்கில் பொதுமக்கள் பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை-என்றார். (அ)

## ஆரியகுளத்தில்...

யாழ். மாநகர முதல்வரின் ஏற்பாட்டில் தனியார் நிதிப் பங்களிப்புடன் ஆரிய குளம் அழகுபடுத்தப்பட்டு, பொழுது போக்கு திடலாகப் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

ஆரியகுளத் திருத்தப் பணிகளின்போது மத சின்னங்களை நிறுவுவது தொடர்பில் இழுபறிநிலை தோன்றியிருந்தது. இதைத் தொடர்ந்து, அங்கு எந்த மதத்தின் அடையாளத்தையும் பிரதிபலிக்கும் வகையிலான கட்டமைப்பையும் அமைப்பதில்லை என்று மாநகர சபை தீர்மானம் நிறைவேற்றியது.

இந்த நிலையில், வடக்கு ஆளுநர் அனுப்பி வைத்த கடிதத்தில் அரசமைப்பின்படி மத அனுட்டானங்களை தடுக்கும் அதிகாரம் மாநகர சபைக்கு கிடையாது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஆரியகுளம் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டதுதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரித்து ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் மாநகர ஆணையாளரைப் பணித்திருக்கிறார்.

மேலும், சமயத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் தன்னைச் சந்திப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் அந்தக் கடிதத்தில் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

## நான் ஏதும்...

இதில் பங்கேற்ற அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் செய்தியாளர்கள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பினர். இதன்போதே, தினேஷ் குணவர்த்தன விடம், "நான் ஏதாவது சொன்னால் அது பிரச்னை ஏற்படுமா?" என்று காதில் இரகசியமாகக் கேட்டார். இது அங்கிருந்த கமெராவில் பதிவானது.

## தனியார்...

தாக ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த தீர்மானத்துக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றைய கலந்துரையாடலின் பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கப்படும் எனவும் அந்த சங்கம் அறிவித்துள்ளது. (அ)

## அரசில் இருந்து...

கூட்டு பொறுப்பு பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால், வெளியேற்றுவதற்கு முன்னர் வெளியேறுவதே நல்லது.

இந்த அரசின் வெற்றியின் பிரதான பங்காளி சுதந்திரக்கட்சி அல்ல. அப்பம் சாப்பிட்டுவிட்டு துரோகம் இழைத்தவர்களே அங்குள்ளனர். எந்நேரத்தில் வேண்டுமானாலும் அக்கட்சியினர் துரோகம் இழைக்கலாம். எனவே, பாய்ந்து செல்வதற்கு முன்னர் வெளியேற்றுவதே நல்லது." - என்றார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவர் பின்னாலும் செல்லாது, சுதந்திரக்கட்சி தலைமையில் பலமான கூட்டணி அமைக்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (அ)

## வல்வெட்டித்துறை...

ஏற்பாட்டுக் குழுவுக்கும் இடையில் நேற்று நடந்த கலந்துரையாடலின் பிரகாரமே பட்டத் திருவிழா இடைநிறுத்தப்பட்டது.

அதிகரித்து வரும் கொரோனா பரவலால் கடந்த ஆண்டும் பட்டத் திருவிழா நடைபெறவில்லை. இதேபோன்று இந்த ஆண்டிலும் கொரோனா தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றமை உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து பட்டத் திருவிழாவை இடைநிறுத்த மக்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். இதையடுத்தே பட்டத் திருவிழா இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அண்மையில், இந்தப் பட்டத் திருவிழாவை இந்த ஆண்டு சர்வதேச பட்டத் திருவிழாவாக இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விடயம் பல எதிர்ப்புக்களையும், கண்டனங்களையும் ஏற்படுத்தியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## மஹிந்தவை...

கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

அமைச்சரவையின் கூட்டுத் தலைமையை ஜனாதிபதியும், பிரதமரும் வகிக்கின்றனர். இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையைப் பெறாமலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் சகாக்களும் சுயமாக முடிவெடுத்து சுசில் பிரேமஜயந்தவின் இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பறித்தெடுத்துள்ளனர். இது இந்த அரசின் வீழ்ச்சிக்கான ஆரம்பமாகும்.

மஹிந்தவின் தீவிர விசுவாசியாகச் சுசில் இருக்கின்றார். அரசிலிருந்து மஹிந்தவை ஓரங்கட்டவே அவரின் சகாவான சுசிலின் இராஜாங்க அமைச்சுப் பதவி ஜனாதிபதியால் பறிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே அதிகாரச் சமர் மூண்டுள்ளது. எனவே, ராஜபக்ஷ குடும்ப அரசு விரைவில் கவிழும் என்பது திண்ணம்-என்றார். (அ)

குணவர்த்தனவின் ஆலோசனையின் பின்னர் செய்தியாளர்களிடம் "சவால்களை வெற்றி கொள்வதற்கு பரந்த கூட்டணியே பிரதானமானது. அரசாங்கத்துடன் ஏற்கனவே உள்ளவர்களை பதவி நீக்கம் செய்யக்கூடாது", என்று தெரிவித்தார். (ஐ)

## 1907 எண் மூலம்...

"சுவ செவன" என பெயரிடப்பட்ட இந்த சேவை நேற்று புதன்கிழமை முதல் செயல்பட ஆரம்பித்தது.

பொதுமக்கள் 1907 என்ற துரித தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

அது மாத்திரமன்றி பொதுமக்கள் 070 790 7907 என்ற எண்ணுக்கு வட்ஸ்அப் மற்றும் வைபர் செயலியூடாகவும் முறைப்பாடுகளை அல்லது ஆலோசனைகளை தெரிவிக்கவும் முடியும். (ஐ)

## 400 கிலோ...

விடுவிக்கப்பட்ட மக்களின் காணியிலிருந்தே இந்த இரு வெடிகுண்டுகளும் கடத்தப்பட்டன என்று அறியவருகின்றது.

விடுவிக்கப்பட்ட காணியில் இரு பெரிய வெடிகுண்டுகளை கண்டவர்கள் அவற்றை இரும்புக்காக விற்பனை செய்யக் கொண்டு சென்ற போதே அவர்களை பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதான நபர்களை மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியாவில்...

மீறி நுழைந்த குற்றச்சாட்டில் நாகபட்டினம் கடல் பகுதியில் வைத்து கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் வடமராட்சியை சேர்ந்த மீனவர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அங்கு தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரையும் அவர்களின் படகுடன் விடுதலை செய்யுமாறு சென்னை எழும்பூர் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து சென்னையில் உள்ள இலங்கை துணைத்தூதரக அதிகாரிகளிடம் இருவரும் கையளிக்கப்பட்டனர். அவர்களை இலங்கை அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உணவுத் தட்டுப்பாடு...

ஏற்படும் என சிலர் கருத்துகளை பரப்பிவருகின்றனர். டுபாய், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அரிசி உற்பத்தி செய்யப்படுவதில்லை. அந்நாட்டு மக்கள் பட்டினியிலா கிடக்கின்றனர்? இறக்குமதி செய்யப்படுகின்றது.

எமது நாட்டில் தற்போது தட்டுப்பாடு ஏற்படும் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும். எனவே, எதிர்காலத்தில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அவை இறக்குமதி செய்யப்படும்-என்றார். (அ)

## யாழ்.பல்கலைக்...

நுழைய முடியாதபடி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவனை உடனடியாக விடுதியில் இருந்தும் வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவன் ஒருவர் மீதே விஞ்ஞான பீடாதிபதியினால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில், புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்கு உள்ளாக்கியதுடன் மாணவர்கள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் குறித்த சிரேஷ்ட மாணவன் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், மாணவர் நலச்சேவை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முடியும் வரை குறித்த மாணவன் உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று விஞ்ஞானபீட பீடாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu




## மரண அறிவித்தல்

மலர்வு 24 - 05 - 1947



உதிர்வு 04 - 01 - 2022

### தருமலிங்கம் கிருபானந்தன்

யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Frankfurt Main, Hessen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் கிருபானந்தன் அவர்கள் 04.01.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் தருமலிங்கம் - சோதிப்பிள்ளை தம்பதியரின் மகனும், செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி யின் அன்புக் கணவரும்,சுதர்சணா, ரூபணா ஆகியோரின் அன்புத் தந்தையும்,கிருபதாஸ், சுதாலன் ஆகியோரின் பாசமிகு மாமாவும்,சஹாணா, ஆதீப், மிலா, ஆரியன் ஜெய், அனிஸ் ரெய் ஆகியோரின் அன்புப் பேரனும், உலகநாயகி (கனடா), காலஞ்சென்ற செல்வானந்தன், காலஞ்சென்ற கௌரியம்பாள், இராசேந்திரன் (Holland), லோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலசிங்கம், காலஞ்சென்ற ஆனந்தராசா, புஸ்பராணி(கனடா), இராசேஸ்வரி (Holland), சௌந்தரராசா(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**லோகேஸ்வரி - சகோதரி**
Mobile : +16479278561

தகவல்:
**குடும்பத்தினர்.**



# அம்பாறையில் கன மழையால் சின்னமுகத்துவாரம் உடைப்பு!

*அக்கரைப்பற்று, ஜன. 06*

அம்பாறை - ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழையால் சின்னமுகத்துவாரம் உடைப்பு எடுத்துள்ளது. இதனால், சாகாமம் - நீத்தையாறுக்கு அண்மித்த பிரதான வீதியின் மேலாக வெள்ளநீர் பாய்வதால் இந்தப் பகுதிஊடாக மக்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் வயல்நிலங்கள் பலவும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. தாழ்நிலப்பிரதேங்களில் சூழ்ந்துள்ள வெள்ளநீரை வெளியேற்றும் பொருட்டும் வெள்ளநீரை வெளியேறும் சின்னமுகத்துவார ஆற்றுமுகப்பிரதேசத்தை அகழ்வது தொடர்பில் பிரதேச செயலக மட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்த நிலையில் நேற்று சின்னமுகத்துவாரம் உடைப்பு எடுத்து வெள்ளநீர் வெளியேறி வருகின்றது.

இதேநேரம் அம்பாறை மாவட்டத்தில் நேற்று மதியத்தின் பின்னர் மழை சற்றுக் குறைவடைய ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# விசேட அதிரடிப்படையினரால் பொதுமக்களுக்கு உணவுப்பொதி

*கல்முனை, ஜன.06*

கொரோனா தொற்று நோய் மற்றும் தற்போதைய வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படையினரின் ஏற்பாட்டில் நேற்று கல்முனை வொலிவோரியன் வீட்டுத்திட்ட ஹிஜ்ரா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

விசேட அதிரடிப் படையினரின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர, அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர் சேனாதீர, மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி ஜெயவிடவிதாண ஆகியோரின் வழிகாட்டலுக்கடைய பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கட்டமாக இந்த வேலைத்திட்டம் நேற்று சாய்ந்தமருது பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது.

பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.சி.டி.ஏ ரத்நாயக்க, பதில் பொறுப்பதிகாரி எஸ்.எம்.பி.பி.எம். டயஸ், சிறுவர் மற்றும் இளைஞர்களை பாதுகாக்கும் சமூக ஸ்தாபனத்தின் தலைவர் சர்மில் ஜஹான் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கினர். (அ)




# வடிகால் அமைக்குமாறு கோரி இருதயபுரத்தில் போராட்டம்

*மட்டக்களப்பு,ஜன. 06*

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரத்தில் வடிகால் அமைக்கக்கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரத்தில் வடிகால் அமைக்கக்கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இருதயபுரம் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு மக்கள் நேற்றுக் காலை இருதயபுரம் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த மைதானத்துக்கு அருகில் நீண்டகாலமாக வடிகால் அமைத்துதருமாறு கோரிக்க விடுத்துள்ள போதிலும் இதுவரை வடிகால் அமைக்காமல் வீதியொன்றை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

வீதிவேண்டாம் எங்களுக்கு வடிகாலே வேண்டும், அரச அதிகாரிகளே கள விஜயம் செய்வதில்லையா போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக இப்பகுதி வெள்ளத்தில் மூழ்குவதாகவும் இதன் காரணமாக 800க்கும் அதிகமான குடும்பங்கள் மழை காலங்களில் பாதிக்கப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் பூபால்ராஜா உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர். (அ)

## மரண அறிவித்தல்

மலர்வு 14 - 02 - 1943



உதிர்வு 31 - 12 - 2021

### திருமதி வலன்ரீனா (ராணி) ஜோண்கிங்சிலி

*(கரம்பன் கிழக்கு - யாழ்ப்பாணம்)*

கரம்பன் கிழக்கை பிறப்பிடமாகவும் இல.146, பாங்ஷல் வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வலன்ரீனா (ராணி) ஜோண்கிங்சிலி அவர்கள் கடந்த (31.12.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராயர் - மேரிஜோசப்பின் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முடியப்பு - ரோசமுத்து தம்பதியரின் மருமகளும், ஜோண்கிங்சிலியின் (ஆனந்தராசா - ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயவேர்ஜினி (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், டன்ஸ்ரன் (கனடா) அவர்களின் மாமியாரும், கிஷானி (கனடா) அவர்களின் அன்புத் பேர்த்தியும், பிரான்சிஸ்கம்மா (விமலா - கனடா), ரோஸ் செலஸ்ரீனா (ராஜகுமாரி - கனடா), அந்தோனிப்பிள்ளை (கொலன்ட்), சிறில் (சிறி - கனடா), மாகிறேற் (ராஜினி - கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சேவியர் மற்றும் ரெஜினா (மணி), கிளாறா (மலர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் (06.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**0212227871**

தகவல்:
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர்
திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
அசுரவேட்டை,குலேபகாவலி
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-ஜெயில்

**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய
நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**ஓம் TV**

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்